Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7893


மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி - 14 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 16 (27.03.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ்:179

## மக்கள் கருத்துக்கணிப்புக்கு இரண்டு முக்கிய விடயங்கள்!

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை மாற்றம் செய்தல் மற்றும் வடக்கு - கிழக்கில் சமஷ்டி நிர்வாக முறையை ஏற்படுத்துதல் ஆகிய இரு விடயங்களை முன்னிறுத்தி - மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதிமாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதிக்கு நெருங்கிய சட்ட ஆலோசகர் மற்றும் அரசியல் ஆலோசகரினாலும் தயாரிக்கப்பட்டுள்ள திட்டத் திற்கமையவே, மக்கள் கருத்துக்கணிப் பின்போது இந்த இரு முக்கிய விடயங்களுக்கு ஒரே தடவையில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி அரசியல் அமைப்பு யாப்புத் திருத்தத்தின் மூலம், வடக்கு - கிழக்கு மக்களுக்கு சமஷ்டி நிர்வாக முறையை வழங்குவதற்கும், தற்போது நடைமுறை யிலுள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையைத் திருத்துவதற்கும் ஒரே தடவையில் மக்கள் அனுமதியைப் பெற்றுக் கொள்வது ஜனாதிபதியின் திட்டமெனத் தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு எதிர்க்கட்சி (12 ஆம் பக்கம் பார்க்க)




## புலிகள் மீதான தாக்குதல்கள்; நாளை விசாரணை ஆரம்பம்!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த பெப்ரவரி மாதம் நடந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தாக்கப்பட்டது சம்பந்தமாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகள் நாளை முதல் ஆரம்பிக்கவுள்ளன.

ஐந்து நாட்கள் அம்பாறையிலும் எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் ஐந்து நாட்கள் மட்டக்களப்பிலும் இடம்பெறும் இந்தக் குழுவுக்கு சாட்சியமளிப்பதற்கு மாவட்டப் போர்நிறுத்த தலைமைக் கண்காணிப்பாளர்கள்தான் முன் வந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் பிரதேசங்களில் புத்தர் சிலைகள்; நிறுத்தாவிடின் இனக்கலவரம் வெடிக்கும்!

## அரசாங்கத்தை எச்சரிக்கிறார் ரவூப் ஹக்கீம்



(கொழும்பு)

கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் புதிதுபுதிதாக புத்தர் சிலைகள் அமைக்கப் படுவதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிடின் இனங்களுக் கிடையிலான கலவரம் வெடிக்கும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித் திருப்பதாவது –

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் புத்தர் சிலைகள் அமைக்கப்படுவதை அரசாங்கம் நிறுத்தவேண்டும். இல்லையெனில் இது இரண்டு இனங்களுக்கிடையிலான வன்முறைகளைத் தோற்றுவிக்க வழிவகுக்கும். இந்தப் புத்தர் சிலைகள் அமைக்கப்படுவதானது 100 வருடங்களுக்கு மேற்பட்ட சிங்கள – முஸ்லிம் மக்களிடையேயான உறவினைச் சீர்குலைக்கும் வகையில் வன்செயல்களை ஏற்படுத்தும். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் 15ஆம் திகதிவரை உச்ச வெப்பம் தொடரும்!


(யாழ்ப்பாணம்)

கோடை வெப்பத்தின் தாக்கம் யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ளதாகவும், வெப்பநிலை 34°C ஆக உயர்ந்திருப்பதாகவும் திருநெல்வேலியில் உள்ள காலநிலை அவதானிப்பு நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த உச்ச வெப்ப காலநிலை ஏப்ரல் 15ஆம் திகதி குடாநாட்டில் சூரியன் உச்சம் கொடுக்கும் வரை தொடருமெனவும் காலநிலை அவதானிப்பு நிலையத்தினர் தெரிவித்தனர்.

குடாநாட்டுக்கு ஏப்ரல் 15இல் சூரியன் உச்சம் கொடுக்கவிருக்கிறது. ஏப்ரல் 14ஆம் திகதியன்று நெடுந்தீவு மற்றும் நல்லூர் பகுதிகளுக்கும், ஏப்ரல் 15ஆம் திகதியன்று காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை பகுதிகளுக்கும் சூரியன் உச்சம் கொடுக்க இருக்கிறது. அதுவரைக்கும் குடாநாட்டின் வெப்பநிலை தற்போதையதைப் போல தொடருமெனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழீழ தேசிய தொலைக்காட்சி நள்ளிரவில் சேவை ஆரம்பம்!




தமிழீழ தேசியத் தொலைக்காட்சி நள்ளிரவுமுதல் சேவையை தொடங்கியது.

ஐரோப்பாவில் ரி.ரி.என் தொலைக்காட்சியூடாக நேற்று நள்ளிரவு 12 மணிக்கு தனது சேவையை தமிழீழத் தொலைக்காட்சி ஆரம்பித்தது.

தமிழீழ தாயகத்தின் தேசியக்குரலை வெளிப்படுத்துகிற ஒளிஊடகமாக சேவை ஆரம்பித்துள்ள தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் தாயகத்திலிருந்து தற்போது 30 நிமிடங்களுக்கான ஒளிபரப்பு இடம்பெறும். இதில் முதன்மையாக செய்திப்பகுதி இடம்பெறும் என தமிழீழ தேசிய தொலைக்காட்சி இயக்குனர் தெரிவித்தார்.

இந்த ஒளிபரப்பு நேரம் விரைவில் ஒன்றரை மணி நேரம் அதிகரிக்கப்படவுள்ளது.

விரைவில் உலகில் பல்வேறு பகுதிகளுக்கும் தமிழீழத் தேசிய தெலைக்காட்சியின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மே மாத நடுப் பகுதியில் அமைச்சரவை மாற்றம்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவை மாற்றம் எதிர்வரும் மே மாத நடுப்பகுதியில் இடம்பெறலாமென அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சரொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது ஜே.வி.பிக்கு ஒதுக்கப்பட்ட அமைச்சுப் பதவிகளைத் தவிர்ந்த மற்றைய அமைச்சுப் பதவிகளின் சில பிரிவுகளில் மாற்றங்கள் நிகழலாமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்த அமைச்சரவை திருத்தத்தில் ஊடகத் துறையை ஜனாதிபதி தன்வசம் வைத்திருப்பதுடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் - தொண்டமானுக்கும் முக்கிய அமைச்சுப் பதவியொன்றும் வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மந்த கதியில் புனர்நிர்மாணம்; ஐரோப்பிய பிரதிநிதிகள் விசனம்!

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்நிர்மாணப் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெற்று வருவதாக ஐரோப்பிய நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுத் தலைவர் லீனா பென் விசனம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்த இந்தக் குழு - தமது பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் திரும்பிய வேளை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே லீனா பென் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது -

சுனாமி பேரனர்த்த புனர்நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான நிதி கிடைக்கின்ற போதிலும் அத்தியாவசிய புனர்நிர்மாணப் பணிகள் தாமதமடைந்து வருகின்றன. இவ்வாறு தாமதமடைவதால் இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதுடன் தொடர்ந்து நிவாரண உதவிகளிலேயே இவர்கள் தங்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஹக்கீமின்ர மிரட்டுக்கெல்லாம் அம்மா பயப்படப் போறாவோ...!

## நடேசனுக்கு ஹெலி வசதி; அரசு வழங்க மறுப்பு!

(கொழும்பு)

ஐரோப்பாவுக்கான அரசியல் விவகார விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வன்னிக்குத் திரும்பிச்செல்வதற்கான ஹெலிகொப்டர் பயண வசதியை வழங்க அரசாங்கம் மறுத்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஐரோப்பாவிலிருந்து திரும்பும் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் குழுவினரை, கொழும்பிலிருந்து வன்னிக்கு அழைத்துச் செல்வதற்கு ஹெலிகெ[illegible] வசதி வழங்குமாறு விடுதலை[illegible]கள் சமாதானச் செயலகத்தினூடாக அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் இந்தக் கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டதாகவும் அந்தச் செய்திகள் தெரிவித்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)


UNIT
PIII கணனிகள்
Intel 2.4 P4 கணனிகள் புதிய மொனிட்டருடன்
@ Colombo based price
Whenever you thing about computer products the right place to touch first for Genuine, Technology & Exprienced
3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்
An Indian Engineer's Centre
Each Computer with finest test-ups & modeled finishing
இங்கு (கம்பியூட்டர் சம்பந்தமாக) நல்ல விலையில், சிறந்த தரத்தில் கிடைக்கும்
347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.

# சுனாமியால் உயிரிழந்தோருக்காக மாபெரும் சர்வமதப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தின் மூன்றாம் மாத நினைவுகளை நினைவு கூரும் வகையில் 51வது படைப் பிரிவால் நேற்று மாலை யாழ் பொது விளையாட்டரங்கில் மாபெரும் சர்வ மத பிராத்தனைமேற்கொள்ளப் பட்டது.

இதில் மதத்தலைவர்கள் உட்பட ஏராளமான படையினர், பொலிஸார், பொதுமக்கள் என பெரும் எண்ணிக் கையானோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட யாழ் அரச அதிபர் கே. கணேஸும், யாழ்மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து சுனாமியின் போது உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இரண்டு நிமிட மௌன பிராத்தனை இடம்பெற்றது.

இதை அடுத்து யாழ் மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் யாழ்படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

சுனாமியால் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பத்தாயிரம் தாமரை மலர்கள் கொண்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அத்துடன் ஆயிரக்கணக்கில் தீபங்களும் ஏற்றப்பட்டன.



## உதைபந்தாட்டப் போட்டி

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட பதிவு செய்ப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை முதல் 30ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன. போட்டிகள் யாவும் யாழ். பொது விளையாட்டு மைதானத்திலேயே இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வை.எம்.எச்.ஏ விளையாட்டுக் கழகங்களை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழகமும் மாலை 5 மணிக்கு காந்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலாமன்ற விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

## உதைபந்தாட்டப் போட்டி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறை யாழ். மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாம உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிமைதானத்தில் நடைபெற்று வரும் போட்டியில் இன்று பி.பகல் 3 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வலிகாமலீக் ரெட்ரேஞ்சல் அணியை எதிர்த்து யாழ் லீக் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மாலை 4மணிக்கு இடம்பெறும் மற்றைய ஆட்டத்தில் நாவாந்துறை சென் நீக்லஸ் அணியை எதிர்த்து வலிகாமலீக் டயானா அணியும் மாலை 5மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் தென்மராட்சி அணியை எதிர்த்து யாழ். பல்கலை கழக அணியும் மோதவுள்ளன.

## தூறல் மாணவர் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்பட இருக்கும் தூறல் மாதாந்த சஞ்சிகைக்கான தரமான ஆக்கங்களை பாடசாலை மாணவர்கள் அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

அறிவியல் தகவல்கள் தமிழ் பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கக் கூடிய சிறுகதைகள் கட்டுரைகள் கவிதைகள் மற்றும் விளையாட்டுத் தகவல்கள் ஏனைய அருமையான புதுமையான தகவல்கள் எதிர்பார்க்கப்படுவதாகவும்

ஆக்கங்கள் வகுப்பு மாணவர் ஒன் றிய பிரதிநிதி ஊடாகவோ அல்லது தமிழ் மாணவர் ஒன்றிய தலைமை செயலகத்தின் ஊடாகவோ ஒப்படைக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறது.

## வருடாந்த ஈஸ்டர் கிரிக்கெட் போட்டி!

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை சனசமூக நிலையமும் ஈச்சமோட்டை விளையட்டுக் கழகவும் இணைந்து நடாத்தும் வருடாந்த ஈஸ்டர் கிரிக்கெட் போட்டிகள் இன்று ஈஸ்டர் தினத்தில் ஈச்சமோட்டை சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற உள்ளது.

1942ஆம் ஆண்டு முதல் வருடா வருடம் நடைபெற்று வரும் இந்த மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் இவ்வருடம் 64ஆவது வருடமாக சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு உள்ளூர் கழகங்களிடையே நடாத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் காலை10.30 மணிக்கு வருடாந்த மணமானவர்கள் எதிர் இளைஞர்கள் கிரிக்கெட் போட்டியும் நடைபெறஉள்ளது. (113)

## எல்லே போட்டி

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் வீரர்களுக்குரிய எல்லே விளையாட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஆண்களுக்கான போட்டி காலை 8.30மணிதொடக்கம் இடம்பெறவுள்ளதுடன். பெண்களுக்கான போட்டி அன்றைய தினமே மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. போட்டிகள் யாவும் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (113)

## தந்தை செல்வா நினைவு நாள்

தந்தை செல்வாவின் 107வது பிறந்த நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தந்தை செல்வா நினைவிடத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடு களை தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு செய்துள்ளது.

## எழுத்தாளர் சாந்தனின் நூல் வெளியீடு

எழுத்தாளர் ஐ.சாந்தனின் இருபதாம் நூற்றாண்டின் உலக இலக்கியம் என்ற நூல் வெளியீட்டு விழா இன்று காலை 10.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

எஸ்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆய்வுரைகளை கே.எஸ்.சிவகுமாரன், கலாநிதி ஜெராட் றொபுச்சோ, எஸ்.கே.விக்னேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.




இப்பொழுது இலங்கையில்
அக்யூரேட் — 007
ஜாக்குவார் — 009
சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்
Lungies (Sarongs)
Vests
Briefs
Kerchiefs
Direct Importers Wholesalers & Retailers
SOLE DISTRIBUTORS
OCEANICK IMPEX
192, Main Street, Colombo-11.
Tel: 2336720, 2327168 Wholesale: 2384131
Fax: 2326961 E-mail: oceanick192@yahoo.com

நாகம்ஸ் சுன்னாகம்
சில தினங்கள் மட்டும்
சூர்யா, ஜோதிகா நடித்த
மாயாவி
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர், அஸ்வின் மற்றும் பலர் நடித்த
(சிறந்த குடும்ப காவியம்)
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

நிறைஞ்சனாஸ்
சிம்பு (இருவேடம்) ஜோதிகா நடித்த
மன்மதன்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
இன்று மட்டும்
குளிரூட்டப்பட்டது
THE PASSION OF THE CHRIST (இயேசுநாதரின் இறுதி 12 மணி நேரக் கதை)
26.3.2005 முதல் விஜயகாந் செந்தில் நடித்த நிறைஞ்ச மனசு
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3857)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ்
லண்டன்
இயக்கம்: சுந்தர்.C
ரிக்கெற்முற்பதிவு செய்துகொள்ளலாம்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும் (சி-3859)


### முக்கிய அறிவித்தல்

சுனாமியால் பாதிக்கப்பட்ட 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் கீழ்க் காணப்படும் விபரங்கள் எம்மால் சேகரிக்கப்பட்டு வருகின்றது. பொது மக்களோ அல்லது பொறுப்புவாய்ந்தவர்களோ கீழ்க்காணப்படும் விபரம் தெரிந்திருப்பின் பிள்ளைகளின் உயரிய நலன் கருதி கீழ்க் காணப்படும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்திற்கோ உடன் அறியத்தரவும்.

- பெற்றோரை இழந்திருக்கலாம்.
- நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம்.
- காணாமல் போயிருக்கலாம்.
- உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்திருக்கலாம்.
- இல்லங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கலாம்.
- வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கலாம்.
- கல்வி புறக்கணிக்கப்பட்டிருக்கலாம்.
- துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டிருக்கலாம்.

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு.
அறை எண் 30, யாழ். போதனா வைத்தியசாலை.
தொ. இல : 222 5657
மின்னஞ்சல் : dcpc_jaffna@yahoo.com
இணையம் : www.pillaii.org

C/3926

### கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் கரவெட்டி

**கிராமிய வங்கி வைப்பு மீதிகளை உறுதிப்படுத்தல்**

மேற்படி சங்கத்தின் 2003 - 2004 நிதியாண்டு காலத்திற்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதால், கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் 29.03.2005, 30.03.2005, 31.03.2005 ஆகிய தினங்களில் சேமிப்புப் புத்தகங்களிலும் கிராமிய வங்கிப் புத்தகங்களிலும் உள்ள 31.05.2004ல் உள்ளவாறான மீதிகளைக் கிராமிய வங்கிக் கடமை நேரத்தில் சரிபார்த்து உறுதிப்படுத்தி கணக்காய்விற்கு ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

பொதுமுகாமையாளர்
கட்டைவேலி நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்

23.03.2005

C/ 3935


ENGLISH MEDIUM



பாலர் பாடசாலை
புதிய பிரிவுகள் ஆரம்பம்
APRIL 25
புதிதாய் சேரும் மாணவர்களுக்கு APRIL மாதத்திற்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.
Play Group
Montessori
Pre School
BRITISH BUSINESS SCHOOL
யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். இல:174, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
வடமராட்சி: பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.
HOT LINE : 021-222-5796
British BUSINESS SCHOOL
Where Students Come First

# கருணாவை ஆதரிக்கவில்லை என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்!

## தேசிய சமாதானப்பேரவை கோரிக்கை

(கொழும்பு)

கருணா அணியினருக்கு அரசாங்கம் ஆதரவு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து, தெளிவு படுத்தவேண்டுமென தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியான தீவுச் சேனையில் கருணா அணியின் முகாம் இயங்கிவருவதை சுட்டிக் காட்டியுள்ள சமாதானப் பேரவை - அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இதுபோன்ற துணைப்படை முகாமொன்று இயங்கவில்லை என்பதையும், அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கோரியுள்ளது.

நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே தேசிய சமாதானப் பேரவை இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

மேலும் இந்த அறிக்கையில் - கருணா அணியினருக்கு அரசாங்கம் ஆதரவு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் எந்தவித ஆதாரமும் இல்லை என்பதை அரசாங்கம் உடன் தெளிவுபடுத்தவேண்டும்.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கையில் 1.8 சரத்தின் பிரகாரம் - இதைப்போன்ற துணைப் படைகள் இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜே.வி.பி.தலைவர் சோமவன்சவை கைது செய்ய எவ்வேளையிலும் ஆணை?

(கொழும்பு)

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவைக் கைது செய்ய எந்தநேரத்திலும் ஆணை பிறப்பிக்கப்படலாம் என்பதனால், தயார் நிலையில் இருக்குமாறு அரசின் உயர்மட்டப் பொலிஸ் விசாரணைப் பிரிவின் தலைவர் தமது அதிகாரிகளுக்குப் பணித்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச சொத்துக்களை அழித்தமை, வங்கிக் கொள்ளை, கொலைகள் உட்படப் பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சோமவன்ச அமரசிங்கவைக் கைது செய்வதற்குத் தனக்கு ஆணை கிடைக்கலாம் என அவர் தனது சக அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

ஆகையால் சோமவன்சவின் பயணங்கள் மற்றும் அவர் அடிக்கடிச் செல்லும் இடங்கள், தங்கும் இடங்கள் என்பவற்றைக் கண்காணிக்கும்படி அந்த அதிகாரி தனது சக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (தே)

# இஸ்லாமிய அறிஞர் நாடு கடத்தல் கிழக்கில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்!

(கொழும்பு)

தமிழகத்தைச் சேர்ந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர் பி.ஜெய்னுலாப்டீன் நாடு கடத்தப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து, அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கல்முனைக்குடி முஸ்லிம் மக்கள் அமைப்பு என்ற பெயரில்அன்சார் சுன்னத்துல் முகமதியா ஜும்மா பள்ளிவாசல் முன்பாகவும், நிந்தவூர் ஜமிஉத் தவ்ஹீத் பள்ளிவாசல் முன்பாகக் குறிப்பிட்ட பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

வெள்ளிக்கிழமை நண்பகல் ஜும்ஆத் தொழுகையின் பின்பு குறிப்பிட்ட பள்ளிவாசல்கள் முன்பாக கூடிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மதச் சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் மனித உரிமையையும் உதாசீனம் செய்யும் நடவடிக்கை இது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

நிந்தவூர் ஜமிஉத் தவ்ஹீத் பள்ளிவாசல் தலைவர் எம்.எச்.மொகமது இத்ரீஸ் இது தொடர்பாக சந்திரிகாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் -

மதச் சுதந்திரத்தையும், கருத்து சுதந்திரத்தையும், மனித உரிமையையும் மீறும் இந்தச் செயலுக்காக அரசாங்கம் இரு நாட்டு முஸ்லிம்களிடமும் மன்னிப்புக் கோர வேண்டும்.

நாடு கடத்தப்பட்ட அறிஞரை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவர ஆவன செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அரசியலமைப்பு சபைக்கு ஆறு புதிய அங்கத்தவர்கள்

அரசியலமைப்புச் சபையின் அங்கத்தவர்கள் 6 பேரினது பதவிக்காலம் முடிவடைந்துள்ளதால், அவர்களின் இடத்துக்குப் புதிய அங்கத்தவர்கள் 6 பேரை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அரசியலமைப்புச் சபையின் செயலாளர் தம்மிக ஹித்துல்கொட தெரிவித்தார்.

இந்த அங்கத்தவர்கள் ஆறுபேரில் ஐவர் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் இணக்கத்தோடு, ஜனாதிபதியால் நியமிக்கபடுவர்கள். மற்றைய அங்கத்தவர் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களின் சம்மதத்துடன் நியமிக்கப்படுவர்.

பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் சம்மதத்துடன் பரிந்துரைக்கப்படும் ஐவரில் 3 பேர் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. (தே)

# புலிகள் - கண்காணிப்புக் குழுவினர் நேற்று அம்பாறையில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் குயிலின்பனுக்கும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சட்ட ஆலோசகர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

விசேட அதிரடிப் படையினர் கடந்த ஒரு மாத காலமாக மேற் கொண்டுவரும் நடவடிக்கைகள் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் எனக் குயிலின்பன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளால் மக்களுக்குக் காண்பிக்கப்பட்டு வரும் படக்காட்சிகளைத் தடைசெய்ய விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கை எடுத்துவருவதாக குயிலின்பன் இந்தச் சந்திப்பில் முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பித்தார்.

இதனை ஆராய்ந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மக்கள் கருத்துகளைக் கேட்டறிந்து முடிவுகள் தெரிவிக்கப்படும் எனத் கூறினார்.

இதேவேளை - குறிப்பிட்ட படக்காட்சி போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முரண்பாடான விடயமல்ல எனவும் குயிலின்பன் தெரிவித்தார்.

# பொதுக்கட்டமைப்பு குறித்து எந்த இணக்கமும் இல்லை!

## ஜயந்த தனபால கூறுகிறார்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொடுக்கும் வகையில் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இதுவரை எவ்வித உறுதியான உடன்பாடும் ஏற்படவில்லையென அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

நோர்வேயின் அனுசரணையுடன் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தபோதிலும், அது தொடர்பாக இதுவரை இறுதிமுடிவுக்கு வரமுடியாமல் உள்ளது.

இந்தப் பொதுக்கட்டமைப்பு விரைவில் தயாரிக்கப்பட்டாலும், இதற்குத் தேவையான வெளிநாட்டு உதவிகள் உறுதியளித்தபடி கிடைத்துள்ளனவா என்பது குறித்து எனக்கு உறுதியாகத் தெரியாது.

எவ்வாறாயினும் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது காலதாமதமாகிச் செல்வதால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# பாதாள உலக கோஷ்டியினருக்காக மனித உரிமை அமைப்புகள் போர்க்கொடி

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டியினரை அழிக்கும் நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு பல்வேறு மனித உரிமைகள் அமைப்பினர் பொலிஸ்மா அதிபருக்கு அழுத்தங்கள் கொடுத்து வருகின்றனர்.

பாதாள உலகக் குழுவினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு, பொலிஸாருக்கு எந்தவித உரிமையும் இல்லை எனக் கடுமையாக எச்சரித்துள்ள இந்த அமைப்புகள் - நாட்டின் சாதாரண சட்டத்தையே பாதாள உலக கோஷ்டியினர்மீதும் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

இது குறித்து பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ கருத்துத் தெரிவிக்கையில் -

பாதாள உலக கோஷ்டியினர் மீதும் சாதாரண சட்டத்தை கடைப்பிடிக்கப் பொலிஸார் முயல்கின்றனர். ஆனால் அவர்களைக் கைது செய்த பின்னர் - அவர்கள் பொலிஸாரிடமிருந்து தப்பியோட முற்பட்டால், அவர்களுக்கு எதிராக அதிகாரத்தைப் பாவிப்பதற்குப் பொலிஸார் பின்வாங்கப் போவதில்லை.

கடந்த காலங்களில் பாதாள உலக கோஷ்டியில் அதிகமானோர் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து தப்பியோட முற்பட்டபோது, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களில் சிக்கியே பலியாகினர்.

இதேவேளை - இவர்களை அழிக்கும் தமது நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் பலத்த ஆதரவு வழங்கி வருகின்றனர்.

பாதாள உலகக் கோஷ்டியினரிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளும் மனித உரிமை அமைப்புக்கள் சில அவர்களைப் பாதுகாப்பதற்கு முன்வருகின்றனர் எனப் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களை அழிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இவர்களின் குற்றச் செயற்பாடுகள் ஓரளவு குறைந்திருப்பதாகப் பொலிஸ் தலைமையகம் அண்மையில் சமீபத்தில் நடத்திய ஆய்வுகளின்போது தெரியவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# சாதாரணதர பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம் வெளியாகும்!

(கொழும்பு)

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த மாதம் வெளியிடப்படுமென பரீட்சை ஆணையாளர் மஹிந்த விஜயசிறி தெரிவித் துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கு ஐந்து லட்சம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்ததுடன் அவர்களில் 1,26,819 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளெனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதால், இந் தப் பரீட்சைப் பெறுபேறுகளை மார்ச் மாதத்தில் வெளியிட முடியாமற் போனதாகத் தெரிவித்த பரீட்சை ஆணை யாளர், ஏப்ரல் மாதம் வெளியிடப்படவுள்ள முடிவுகளை www doenet.lk இணையத்தளம் மூலமாகவும் பார்வையிடலாமெனத் தெரிவித்தார். (தே)



மாணவர் பேரவையில் நேற்றுநடைபெற்ற சுனாமியால் பாதிக்கப்பட்ட உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி - மாணவியொருவருக்கு சைக்கிள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இலங்கை மின்சார சபையை அரச கம்பனிகளாக்கத் திட்டம்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபையை எட்டு அரசாங்க கம்பனிகளாக்கும் அரசின் திட் டம் குறித்து ஆராயும் விசேட அமைச்சரவைக் கூட்டமொன்று நாளை திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த புதன்கிழமை மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இலங்கை மின்சாரசபையை எட்டு கம்பனிகளாக்கும் திட்டம் குறித்து ஆராயப்பட்டது. அதனை முழுமையாக ஆராயும் நோக்கத்துடன் இந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தை நடத்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இதேவேளை மின்சாரசபையை அரச கம்பனிகளாக மாற்றி அமைத்தால் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்படவேண்டிய பலகோடி ரூபா கடனை ரத்துச் செய்வதாக ஆசிய அபிவித்தி வங்கி உறுதியளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதனிடையே மின்சாரசபையை அரசு கம்பனிகளாக மாற்றும் திட்டத்தின் மூலம் நாளடைவில் தனியார்மயமாகிவிடும் என மின்சாரசபை ஊழியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொம்மாந்துறையில் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றி ல் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆறுமுகம் மணாளன் (வயது 34) என்ற இளைஞரின் வீட்டுக்குச் சென்ற நபர்களே, அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், படுகாயமுற்ற இவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தாகவும் தெரியவருகிறது.

பெங்களூர் டெஸ்ட்போட்டி

# ஷேவாக் இரட்டைச் சதம் இந்தியா 379 ஓட்டங்கள்!



பாகிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் - இந்திய அணி 6 விக்கெட் இழப்புக்கு 379 ஓட்டங்களை எடுத்துள்ளது.

பாகிஸ்தான் முதல் இனிங்ஸில் 570 ஓட்டங்களைக் குவித்ததையடுத்து, முதல் இனிங்ஸை விளையாடிய இந்தியா, 2ஆவது நாள் ஆட்டநேரமுடிவில் விக்கெட் இழப்பின்றி 55 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஷேவாக் 39 ஓட்டங்களுடனும், கம்பீர் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இருவரும் தொடர்ந்து விளையாடினார்கள். ஆரம்பம் சிறப்பாகவே இருந்தது.

போட்டி தொடங்கிய 7ஆவது ஓவரில் ஷேவாக் 47 ஓட்டங்களில் இருந்து பவுண்டரி அடித்து 50 ஓட்டங்களைத் தொட்டார். 56 பந்துகளில் 7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் ஷேவாக் அரைச்சதமடித்தார். மறுமுனையில் இருந்த கம்பீர் பொறுமையாக ஆடினார்.

ஸ்கோர் 98ஆக இருந்தபோது, கௌதம் கம்பீர் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை மொகமட் சமி கைப்பற்றினார். கம்பீர் 24 ஓட்டங்களை எடுத்தார்.

2ஆவது விக்கெட்டுக்கு வீரேந்தர் ஷேவாக்குடன், ராகுல் ராவிட் ஜோடி சேர்ந்தார். இந்திய அணி 24.4ஆவது ஓவரில் 100 ஓட்டங்களைத் தொட்டது.

ஷேவாக் வழக்கம்போல் அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். அவர் பாகிஸ்தான் பந்துவீச்சை சிறப்பாக எதிர்கொண்டு ஆடினார். அவர் பந்துகளை பவுண்டரிக்கு விளாசினார்.

மதிய உணவு இடைவேளையின் போது, இந்தியா 39 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 147 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஷேவாக் 95 ஓட்டங்களுடனும், ராவிட் 16 ஓட்டங்களுடனும் இருந்தனர்.


காலையில் இருந்து மதிய உணவு இடைவேளைக்குள் இந்தியா மேலும் 92 ஓட்டங்களை எடுத்து ஒரு விக்கெட்டை இழந்திருந்தது.

மதிய உணவு இடைவேளைக்குப் பின்பு ஷேவாக்கும், ராவிட்டும் தொடர்ந்து விளையாடினார்கள். 99 ஓட்டங்களிலிருந்து ஷேவாக், கனேரியா பந்தில் ஒரு ஓட்டத்தை எடுத்து சதமடித்தார். அவர் 138 பந்துகளில் 15 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 100 ஓட்டங்களைத் தொட்டார்.

கொல்கத்தா டெஸ்டில் இரண்டு இனிங்ஸிலும் சதமடித்த ராவிட் 22 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை கனேரியா எல்.பி. டபிள்யூ முறையில் கைப்பற்றினார். அப்போது இந்தியாவின் ஸ்கோர் 172ஆக இருந்தது. 2ஆவது விக்கெட் ஜோடி 74 ஓட்டங்களை எடுத்தது.

3ஆவது விக்கெட்டுக்கு ஷேவாக்குடன், டெண்டுல்கர் ஜோடி சேர்ந்தார்.

ஷேவாக் 147 ஓட்டங்களிலிருந்து சிக்ஸர் அடித்து 150 ஓட்டத்தைத் தொட்டார். அப்போது இந்திய அணி



யின் ஸ்கோர் 257ஆக இருந்தது. டெண்டுல்கர் 41 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, அப்ரிடியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அப்போது ஷேவாக் 153 ஓட்டங்களில் இருந்தார். பின்னர் அவருடன் லக்ஷ்மன் ஜோடி சேர்ந்தார்.

ஷேவாக் 201 ஓட்டங்களில் கனேரியாவின் பந்தில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவர் இந்த ஓட்டங்களை 262 பந்துகளில் எடுத்தார். இதில் 28 பவுண்டரிகளும், 2 சிக்ஸர்களும் அடங்கும். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய கப்டன் கங்கூலி ஒரு ஓட்டத்தை எடுத்தநிலையில், கனேரியாவின் பந்தில் விக்கெட் காப்பாளரால் ஸ்டம்பிங் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து லக்ஷ்மனுடன் இணைந்த கார்த்திக்




10 ஓட்டங்களுடன் சமியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து லக்ஷ்மனுடன் பதான் ஜோடி சேர்ந்தார்.

இந்தியா 3ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 379 ஓட்டங்களை எடுத்திருந்தது. லக்ஷ்மன் 51 ஓட்டங்களுடனும், பதான் ஒட்டமெதையும் எடுக்காமலும் களத்தில் உள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எதிரான பெங்களூர் டெஸ்டில் வீரேந்தர் ஷேவாக் அதிரடியாக விளையாடி இரட்டைச் சதமடித்தார். 34ஆவது டெஸ்டில் விளையாடும் அவருக்கு இது 10ஆவது சதமாகும். பாகிஸ்தானுக்கு எதிரான 3ஆவது சதம் இதுவாகும். பெங்களூர் மைதானத்தில் முதல் சதத்தை அடித்தார். இந்தப் போட்டித் தொடரில் இது அவரது 2ஆவது சதமாகும். அவருக்கு இது 2ஆவது இரட்டைத்சதமாகும். மொஹாலி டெஸ்டில் 173 ஓட்டங்கள் எடுத்தார்.

# சாதனைக்காக ஆடவில்லை; யுனுஸ் கான் சொல்கிறார்!



சாதனைக்காக ஆடவில்லை. அணியின் வெற்றிக்காகவே ஆடினேன் என்று இரட்டைச்சதமடித்த பாகிஸ்தான் வீரர் யுனுஸ்கான் கூறினார்.

பாகிஸ்தான் அணியின் துணைக் கப்டன் யுனுஸ்கான் 267 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். தனது இரட்டைத் சதம் குறித்து அவர் கூறியதாவது-

300 ஓட்டங்கள் சேர்க்கவேண்டும் என்ற நோக்கில் நான் ஆடவில்லை. இந்த டெஸ்டில் வெற்றிபெற்று தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்ய வேண்டும் என்ற நோக்கில்தான் ஆடினேன்.

எனது தனிப்பட்ட சாதனைக்காக ஆடவில்லை. அணியின் வெற்றிக்காகவே ஆடினேன். 2ஆவது நாள் ஆட்டத்தின்போது 7 அல்லது 8 மணிநேரம் நாங்கள் துடுப்பெடுத்தாடவேண்டு மென்று திட்டமிட்டிருந்தோம்.

மேலும் நிலைத்து நின்று ஆடவேண்டும் என்பதில் குறியாக இருந்தோம். பெங்களூர் ஆடுகளத்தில் தவறு செய்யாமல் ஆடினால் தொடர்ந்து நின்று ஆடலாம்.


இரட்டைத்தசம் அடித்தது மகிழ்ச்சியளிக்கிறது. இந்தியாவின் முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தி நாங்கள் வெற்றிபெறுவோம்.

துணைக்கப்டனாக இருப்பதால், எந்தவித நெருக்கடியும் இல்லை. எந்த ஒரு ஆடுகளத்திலும் நான் ஆடத்தயாராக உள்ளேன். சவாலான இடத்தில் ஆடுவது எனக்கு ரொம்ப பிடித்தமான விடயமாகும்.

இந்திய மக்கள் நல்ல அன்பையும், பாசத்தையும் காட்டுகின்றனர். இது மகிழ்ச்சியளிக்கிறது. இவ்வாறு யுனுஸ்கான் கூறினார்.

## விளையாட்டு

# அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக நியூஸிலாந்து 199 ஓட்டங்கள்!



(ஓக்லாந்து)

அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் - நியூஸிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்களைப் பெற்றது.


அவுஸ்ரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இறுதி டெஸ்ட் போட்டி நேற்று ஒக்லாந்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

கமிங்-ஜே.மார்ஷல் ஜோடி தொடக்க வீரர்களாகக் களமிறங்கி ஆடினர். ஸ்கோர் 15ஆக இருந்த போதே முதல் விக்கெட்டாக கமிங் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இவரையடுத்து எச்.மார்ஷல் களமிறங்கினார். மார்ஷல்-ஜோடி இணைந்து ஆடிக்கொண்டிருந்த போது - ஸ்கோர் 53ஐ எட்டியது. அவ்வேளை ஜே.மார்ஷல் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

இதையடுத்து பிளெமிங் களமிறங்கி எச்.மார்ஷலுடன் சேர்ந்து ஆடினார். இருவரும் அணியின் ஸ்கோரை உயர்த்துவதில் பெரிதும்



முயற்சி செய்தனர்.

இதனால் ஸ்கோர் 179ஐ எட்டிய போது- எச்.மார்ஷல் ஆட்டமிழக்க நேரிட்டது. இவர் 208 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 76 ஓட்டங்களை எடுத்தார்.

இதன்பின்னர் ஸ்கோர் 183ஆக இருந்தபோது, பிளெமிங்கும், 194 ஆக இருந்தபோது வின்சென்ரும்



ஆட்டமிழந்தனர்.

பிளெமிங் 169 பந்துகளில் 8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 65 ஓட்டங்களையும், வின்சென்ற் 2 ஓட்டங்களையும் பெற்றனர்.

நேற்றைய ஆட்டநேரமுடிவில் நியூஸிலாந்து அணி 5 விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அஸ்ரில் 7 ஓட்டங்களுடனும், மக்கலம் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

# உலகக்கிண்ண உதைபந்தாட்டம்: வடகொரியா அதிர்ச்சித் தோல்வி!



(பியாங்யங்)

உலகக் கிண்ண தகுதிச் சுற்று உதைபந்தாட்டப் போட்டியில் பஹ்ரைன் அணியிடம் வடகொரியா அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

ஜேர்மனியில் எதிர்வரும் 2006ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர் நடக்கவிருக்கிறது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. பியாங்யங் நகரில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் வடகொரிய-பஹ்ரைன் அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் பஹ்ரைன் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இந்த அணியின் ஹூசைன் அலி இரண்டு கோல்களை அடித்தார். வடகொரியா சார்பில் பாக் சாங் வான் ஒரு கோலை அடித்தார்.

# சென்றலைட்ஸ் கழக அணியை மத்திய கல்லூரி தோற்கடித்தது!

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சென்றலைட்ஸ் விளையாட்டு கழகத்துக்கு எதிரான 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் 50 ஓட்டங்களால் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 40.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களை மட்டுமேபெற்றது. இதில் றொகான் 24, செல்ரன் 27, கலிஸ்ரன் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணித் தலைவர் கார்த்தீபன் -4, சியாம்ராஜ்-2, பிரகாஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 24 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 79 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால், 50 ஓட்டங்களால் யாழ்.மத்திய கல்லூரி அணி இந்தப் போட்டியில் வெற்றிபெற்றது. இதில் கார்த்தீபன் 32 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி வீரர் சத்தியன் -4, கலிஸ்ரன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (58)

# அக்தரை சேர்ப்பதற்கு எதிர்ப்பு இன்சமாம் ஒப்புக் கொண்டார்!



மிகவும் மோசமாக நடந்து கொள்வதால், வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தரை அணியில் சேர்க்க வேண்டாம் என்று பலமுறை வலியுறுத்தியுள்ளேன் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் இன்சமாம்-உல்-ஹக் தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் இடையே நீண்டகாலமாக பனிப்போர் இருந்துவந்தது. 15 மாதங்களாக இந்தப் பிரச்சினை இருந்துவருவது குறிப்பிடத்தக்கது. தற்போது, அக்தரை அணியில் சேர்க்கவேண்டாம் என வலியுறுத்தியது ஏன் என்பது குறித்து இன்சமாம் கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் வெளியாகும் தி நியூஸ் தினசரியில் வெளியான செய்தியில் இன்சமாம் கூறியதாவது-

அக்தரை அணியில் சேர்க்கவேண்டாம் என்று அணித் தேர்வுக் குழு, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் பலமுறை கூறியுள்ளேன். அக்தரின் மோசமான நடவடிக்கையால் இளம் வீரர்கள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு கூறினேன்.

ஒரு போட்டியில் சிறப்பாக பந்துவீசுவார். அதை வைத்துக் கொண்டே 2 ஆண்டுகளுக்கு விளையாடுவார். கடந்த 2 ஆண்டுகளில் அவருடைய பந்துவீச்சைக் கவனித்தால் இது தெரியும். ஒரு போட்டியில் சிறப்பாக பந்துவீசி விக்கெட்டுக்களை வீழ்த்திவிட்டால், உடனே உடல்நிலை சரியில்லை என்று சில போட்டிகளில் விளையாடமாட்டார்.

அதனால் அவர் அணியில் இடம் பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்பு செயற்கையாக ஏற்படுத்தப்படுகிறது.

அணிக்கு எப்போது தேவையோ அப்போது தனது பங்களிப்பை அவர் அளிப்பதில்லை. தனிப்பட்ட முறையில் அக்தருடன் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், கிரிக்கெட் ஒழுக்கம் என்பது அவரிடம் குறைவாக உள்ளது.


தனிப்பட்ட முறையில் விளையாடுவதை ஏற்கமுடியாது.

சொகைப் அக்தர் மிகச்சிறந்த வீரர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், விளையாட்டு ஒழுக்கம் அவரிடம் இல்லை. அதுமட்டுமிருந்தால் அவரை எவருடனும் ஒப்பிடவே முடியாது.

மிகச்சிறந்த பங்களிப்பை அளித்தால், தனிப்பட்ட வாழ்க்கையில் அவர் எப்படி இருந்தாலும் கவலையில்லை. அவருடைய செய்கையால், இளம் வீரர்கள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது.

அணியின் தேவைக்கேற்ப, ஒழுக்கத்துடன் விளையாடவேண்டும். இந்தநிலையில், நான் வேறு என்ன செய்யமுடியும் என்று கேள்வி எழுப்பியுள்ளார் இன்சமாம்.

# விடுதலையின் வாழ்வுக்காய் உயிர்த்தெழ உயிர்த்த இயேசு அருள் பாலிப்பாராக!



## ஈஸ்டர் செய்தியில் யாழ். ஆயர்

ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய மறைநிகழ்ச்சிகளைச் சிந்திக்கின்ற தவக்காலம் கிறிஸ்தவ மக்கள் அனைவருக்கும் செபதப நோன்பின் காலமாகும். இந்தக் காலம் எமது வாழ்வையும், பணியையும் அலசி ஆராய்ந்து புதிய வாழ்வுக்கு அத்திபாரம் இடும் காலமாகும்.

இந்தக் காலத்தை முடித்து ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பின் மகிழ்வில் நிறைந்திருக்கும் அனைவருக்கும் - உயிர்ப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம் என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை விடுத்துள்ள ஈஸ்ரர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லாக் காலத்தையும்விட, இந்த் தவக்காலம் பணிசெய்ய எமக்குப் பல அழைப்புக்களைத் தந்த காலமாகும். கடந்த ஆண்டில் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடிய மறுதினம்- மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய சுனாமி கடற்கொந்தளிப்பால், மனிதாபிமான ரீதியில் அன்புப் பணிபுரிய பல கோணங்களில் எமக்கு அழைப்பு விட்டிருந்தது.

சொந்த பந்தங்களையும், வாழ்நாள் சொத்து முழுவதையும் ஒரு சில நொடிப்பொழுதுகளில் கண் மூடித் திறக்கு முன்னர் இழக்கின்ற ஒரு அனுபவம் ஒரு பயங்கரமான அனுபவமாகும்.

நீண்டகாலப் போரும், அதன் அழிவுகளும் கொணர்ந்த அழிவையும், வேதனையும் நான்கு நிமிட இயற்கை அனர்த்தம் தந்து எம்மை அதிர்ச்சியிலும், சோகத்திலும் ஆழ்த்தியுள்ளது.

இறப்பையும், இழப்பையும் சந்தித்து விரக்தியின் விளிம்பிலிருக்கும் மக்கள் - நம்பிக்கையை இழந்துவிடாதிருக்கவும், இனியும் இதன் மத்தியிலும் வாழ முடியும் என்ற உறுதியான உணர்வைப் பெற்றுக்கொள்ளும் படியும் வேண்டி நிற்கிறோம்.

இந்த நிகழ்வு நடைபெற்ற பின்னர் உதவிப் பணிகளைப் புரியும்படி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஊடகங்கள் மூலமாக அழைப்பு விடுத்திருந்தோம். எமது அழைப்பை ஏற்று உதவிப் பணிகளை பணமாகவும், பொருளாகவும் உடனடியாக அனுப்பி வைத்த அனைவரையும் நன்றியோடு நினைவுகூருகிறோம். ஆலயங்களிலிருந்தும், பொது அமைப்புக்களிலிருந்தும் இளைஞர்களும், மற்றவர்களும் குழுக்களாக இணைந்து உணவுப் பொருட்களை சேகரித்து, தேவையானவர்களுக்கு வழங்கி பெரும் துணை புரிந்தார்கள்.

குறிப்பான விதமான புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற மக்கள் அங்கு பணியாற்றுகின்ற எமது குருக்களூடாகத் தம்மால் இயன்ற உதவிகளை வழங்கியிருக்கிறார்கள்.

அனைவருக்கும் தனித்தனியான விதமாக நன்றிகளை அனுப்ப முடியாவிட்டாலும், இந்த ஈஸ்ரர் செய்தி வழியாக நன்றியைத் தெரிவிப்பதோடு, உயிர்த்த இயேசு உங்கள் வாழ்வில் என்றும் உங்களுக்கு உறுதுணையாயிருப்பார் என்று கூறிவைக்க விரும்புகிறோம்.

நிவாரணப் பணிகளைவிட, உடனிருந்து ஆறுதல்கூறி ஆற்றுப்படுத்தும் பணி இன்று ஒரு அவசர பணியாக இருக்கிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்துவதும், நம்பிக்கையூட்டுவதும் இன்றைய அவசர தேவையாகும். உண்மையில் இந்தப் பணியைச் செய்வதற்கு எமக்கு ஒரு விசேட கடமையும், தகுதியும் இருக்கிறது. குருக்கள் கன்னியர்கள் தமது பயிற்சிகளோடு அடிப்படை உளவியல் ஆற்றுப்படுத்தும் கலையை கற்றிருக்கிறார்கள்.

இதனைவிட குருக்கள், கன்னியர்களிடம் நம்பிக்கையோடு மனம் திறந்து பேசமுடியும் என்ற ஒரு நம்பிக்கை உணர்வை மக்கள் வைத்திருக்கிறார்கள். எனவே, உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தும் பணியைச் செய்வதற்கான ஒரு அழைப்பு எமக்கு விடப்பட்டிருக்கின்றவேளையில் இதனை முன்னுரிமைப்படுத்தி, இனிவரும் காலங்களில் இந்தப் பயிற்சிகளை வழங்குவோர் - இதில் விசேட கவனம் செலுத்தவும், அநேகரை விசேட பயிற்சிக்காக அனுப்பவும் வேண்டும் என விரும்பி நிற்கிறோம்.

ஏற்கனவே போரால் தாக்கப்பட்டு துன்பத்தை அனுபவித்த மக்களை நாம் மறந்துவிடக் கூடாது. இன்னும் அகதிகளாக இருப்போர் தம் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாதிருப்போர், தமது அன்றாட தொழில் முயற்சிகளைச் செய்ய முடியாதிருப்போர் என அனைவருக்குமான பணிகள் செய்யப்படவும், துரிதப்படுத்தப்படவும் வேண்டும் என வேண்டி நிற்கிறோம்.

குறிப்பாக இந்தியாவிலிருந்து நாடு திரும்பிக் கொண்டிருப்போர் மீளக்குடியமரத் தேவையான உதவியைப் பெற வேண்டியவர்களாவர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவேறிவிட்டன. ஆனால் எந்த முடிவையுமே பெறமுடியாத ஒரு இக்கட்டான நிலையில்தான் தமிழ் மக்களின் வாழ்வு இன்னும் இருக்கிறது. தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்வையும், சுபீட்சமான எதிர்காலத்தையும் உறுதிசெய்கின்ற வகையில் நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்பட சம்பந்தப்பட்ட அனைவரும் உண்மையாக உழைக்க வேண்டுமென வேண்டிநிற்கிறோம்.

காலம் வீணே கடந்து செல்கின்ற வேளையில் - அரசியற் தலைவர்களும், சம்பந்தப்பட்டவர்களும் அதில் எந்தக் கவனமும், கரிசனையும் எடுக்காதிருப்பது மிகவும் வேதனை தருகின்ற ஒரு விடயமாகும்.

சாவை வென்று வெற்றியின் வேந்தனாக உயிர்த்தெழுந்த இயேசு எமது அன்றாட வாழ்விலும், எமது பொது வாழ்விலும் நாம் எதிர்நோக்குகின்ற அனைத்து துன்ப, துயர அனுபவங்கள் வேதனைமிக்க போராட்ட நிகழ்வுகள் அனைத்திலும் வெற்றி பெற்று, ஒரு புதிய வாழ்வுக்காக - ஒரு விடுதலையின் வாழ்வுக்காய் உயிர்த்தெழ, உயிர்த்த இயேசு அருள் பாலிப்பாராக என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவர் முன்னேற்ற நடு நிலையத்தின் ஆண்டுவிழாவை சிறப்பாக நடத்த ஏற்பாடு

சாவற்கட்டு இளைஞர்களால் நடத்தப்படும் மாணவர் முன்னேற்ற நிலையத்தின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாவற்கட்டில் இயங்கிவரும் மாணவர் முன்னேற்றக் கழகத்தில் சுமார் 400 வரையிலான மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர். இங்கு சுமார் 13 ஆசிரியர்கள் கடந்த 2 வருடகாலமாக எந்தவித வேதனமுமின்றி மாணவர்களுக்குக் கற்பித்துவருகின்றமையால், வருடாந்தம் பெருமளவு மாணவர்கள் நன்மையடைந்து வருகின்றனர்.

இந்த ஆசிரியர்கள் இரவு- பகல் எனப் பாராது சாதாரணதர, உயர்தர மாணவர்களுக்கு இலவச விசேட வகுப்புக்களையும், ஏனைய மாணவர்களுக்கான வகுப்புக்களையும் நடத்தி வருகின்றனர்.

இந்த முன்மாதிரியான செயற்பாட்டை ஊர் மக்கள் பலரும் பாராட்டி தமது வரவேற்புகளையும் தெரிவித்தனர். இவர்களைப்போல் துடிப்புமிக்க இளைஞர்கள் அனைத்துக் கிராமங்களிலும் இந்த முன்மாதிரியான செயற்பாடுகளை மேற்கொண்டால் எமது மாவட்டத்தில் சரிந்துசெல்லும் கல்வி நிலையை மீண்டும் உயர்த்த முடியும் என அவ்வூர் பொதுமகன் ஒருவர் தெரிவித்தார்.

இரண்டாம் ஆண்டு நிறைவு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளதால், இங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்காக இரண்டு நிரந்தர கொட்டகைகள் அமைக்க கழக நிர்வாகம் முடிவுசெய்துள்ளது. (44)

## மெய்வல்லுநர் போட்டி

இளவாலை புனித யூதாததேயு இளையோர் மன்றத்தால் நடத்தப்படும் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் - இன்று பகல் 1 மணிக்கு புனித யூதாததேயு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் எ.செஸ்ரர் நியூவேட் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு - மாரீசன் கூடல் பங்குத்தந்தை எவ்.பிரான்ஸ் அடிகளார் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (41)

## காவலரண்கள் புனரமைப்பு

வடமராட்சிப் பகுதியில் இராணுவக் காவலரண்கள் புதிதாகப் பெரிதாக்கப்பட்டு, புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதனால் இராணுவக் காவலரண்களுக்கு அண்மையில் வசித்துவரும் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதேவேளை மக்களது காணிகளில் பனைகளையும், பனை ஓலைகளையும் தமது தேவைகளுக்காக இராணுவத்தினர் வெட்டி வருவதும் குறிப் பிடத்தக்கது. (14)

## சுழிபுரம் புளியந்துறைக் கடற்பரப்பில் கடற்படையினர் -கடற்தொழிலாளர் முறுகல்

(சுழிபுரம்)

சுழிபுரம் புளியந்துறைக் கடற்கரையில் மணல் ஏற்ற முற்பட்ட கடற்படையினருக்கும், அந்தப் பகுதியில் மீன்படித்துக்கொண்டிருந்த மீனவர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டு, முறுகல்நிலை தீவிரமடைந்தது.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் குறிப்பிட்ட கடலில் மீனவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது அங்கு உழவு இயந்திரத்தில் வந்த கடற்படையினர் - கடற்கரையில் 20 மீற்றர் தூரத்தில் பாரியளவில் மணலைத் தோண்டி அள்ள முற்பட்டனர்.

இதைக்கண்ட மீனவர்கள் - இந்த இடத்தில் மணல் அள்ளவேண்டாம் என்றும், மண் அகழப்பட்டால் கடலரிப்பு ஏற்படும் என்றும், வேறு இடத்தில் மண்ணை அகழச் சொல்லியும் படையினர் மண் அள்ளுவதைத் தடுக்க முற்பட்டனர்.

ஆனால் படையினர் இவர்களின் கருத்துகளைக் கணக்கிலெடுக்காமல், தொடர்ந்தும் மணல் அகழ்வதில் ஈடுபட்டனர். இதனால் கடற்தொழிலாளருக்கும், கடற்படையினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்படும் நிலையும் தோன்றியது.

இருப்பினும் கடற்தொழிலாளர்களின் கடும் எதிர்ப்பையும் மீறி, மணல் அகழப்பட்டபின்பே கடற்படையினர் அந்த இடத்தைவிட்டு அகன்றனர்.

இந்தச் சம்பவம் - அந்தப்பகுதி மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியது.

அத்துடன் முன்னரும் பல தடவைகள் இவ்வாறு கடற்படையினர் கடற்கரையில் இருந்து சில மீற்றர் தூரத்துக்குள் மணல் அள்ளிச்சென்றதாகவும் கூறப்படுகிறது. (207)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான உள ஆற்றுப்படுத்தலில் றீடோ நிறுவனம்

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தம் காரணமாக உளரீதியாகப் பாதிக்கப்பட்டோரின் உளநலனை மேம்படுத்தும் நடவடிக்கையில் றீடோ நிறுவனம் ஈடுபடவுள்ளதாக, அதன் யாழ்.மாவட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமார் தெரிவித்தார்.

நோர்வே அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்தே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின்படி, பதினைந்து பேரைக்கொண்ட ஒரு உள ஆற்றுகைப்படுத்துகையாளர் குழுவொன்று அமைக்கப்படவுள்ளதுடன், இந்தக் குழு - சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ள பகுதிகளிலே தனது பணியை மேற்கொள்ளவுள்ளது.

குறிப்பாக பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ள மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் ஆகியோரை மையப்படுத்தியே இந்தச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சுனாமி அனர்த்தத்துக்குப்பின் பாடசீாலைகளிலிருந்து இடை விலகிய அல்லது இதுவரை பாடசாலைகளிலேயே மீள இணையாத மாணவர்களை அடையாளப்படுத்தி, அவர்களுக்கு வேண்டிய கற்றல் உபகரண வசதிகளைச் செய்து கொடுப்பதுடன், அவர்களை மீண்டும் பாடசாலைகளிலே இணைப்பதற்கான நடவடிக்கைகளையும் றீடோ நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

தற்போது ஆரம்பகட்டமாக இந்த உள ஆற்றுப்படுத்தற் செயற்பாடானது -வடமராட்சி கிழக்கிப் பகுதியான பொற்பதி, குடத்தனை, மணற்காடு ஆகிய பகுதிகளிலேயே மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், அதன் பின்னர் ஏனைய பகுதிகளிலும் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (94)

# பாதீனியத்தின் தாக்கம் உரும்பிராயில் அதிகரிப்பு

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலை அண்டிய பகுதிகளிலே - பாதீனியம் செடியானது பெருமளவிலே பரவிக்காணப்படுகிறது.

நச்சுச் செடியான இந்தப் பாதீனியம் இந்தப் பகுதியிலுள்ள ஏனைய விவசாய நிலங்களிலும் பரவுகை அடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும், எனவே உடனடியாக இதனை அழிக்க வேண்டுமெனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்தப் பாதீனியச் செடியானது, கால்நடைகளால் உட்கொள்ளப்படும்போது அவற்றின் உடல் நலனுக் குத் தீங்கு விளைவிப்பதாகவும், மனிதர்களுடைய சுவாசத்துக்கு உகந்தது அல்ல எனவும் தாவரவியலாளர் கள் கருத்து வெளியிட்டு வரும் வேளையில், பாதீனியச் செடியை பரவ விடுதலானது - பல ஆபத்தான விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

எனவே, இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் கவனம் செலுத்த வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (94)

# வடலியடைப்பு பாடசாலை வீதி புனரமைப்பு தாமதமடைவதாக பொதுமக்கள் விசனம்

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருப்பதாக, அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதிப் புனரமைப்புத் தொடர்பாகப் பல தடவைகள் வலி.மேற்கு பிரதேசசபை செயலாளருக்குக் கடிதம் மூலமாக அந்தப் பகுதி பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து, வீதித் திருத்தப்பணிகள் ஆரம்பிப்பதற்கென கற்கள் குவிக்கப்பட்டன.

ஆனால் வீதித் திருத்தப் பணிகளுக்கென கற்கள் பறிக்கப்பட்டு நீண்டகாலமாகியும், இதுவரை அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

ஏற்கனவே மிகவும் ஒடுங்கிய நிலையிலுள்ள இந்த வீதி கற்குவியல்கள் பறிக்கப்பட்டுள்ளமையால், மேலும் போக்குவ்ரத்துச் செய்யமுடியாத நிலையிலேயுள்ளது.

இந்த வீதியை ஏராளமான பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் உபயோகித்து வருகின்றனர்.

இந்த வீதியின் அருகே அமைந்துள்ள விவசாய நிலையங்களிலிருந்து - அறுவடைகளை ஏற்றுவதற்காகவோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ உழவு இயந்திரங்களைக் .கொண்டு செல்வதும் கடினமாகவுள்ளது.

அதேவேளை, இந்த வீதியின் அகலம் முன்னர் இருந்ததைவிட தற்போது குறைவாகவுள்ளதாகவும், அருகிலுள்ள வயல்நிலங்களின் எல்லை அதிகரிப்பே இதற்குக் காரணம் எனவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மாணவர்கள், விவசாயிகளின் நன்மைகருதி இந்த வீதியை உடனடியாகத் திருத்தியுதவுமாறு, இந்தப் பகுதி மக்கள் வலிகாமம் மேற்கு பிரதேசசபை செயலாளரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் - வடலியடைப்பு இடையேயான பயணத்துக்கான சுருக்கமுறையான பாதை இந்த வீதியே என்பதும் குறிப்பிடத்தக்கது. (94)



# விளையாட்டு அரங்கம்


## அழகிய தமிழ் மகள் இவள்

அதே கரங்களால் அறுகரிசி போட்டு நூறாண்டு வாழ வாழ்த்த தனது அரசியல் பணிகளையும் புறந்தள்ளிவிட்டு முரளியிடம் ஓடோடிச்சென்ற அர்ஜுனவின், முரளி மீதான பிணைப்பு மிக வலுவானதுதான். இன்னொருபுறம் சனத் வேட்டிகட்டி மாப்பிள்ளையின் அருகில் புன்சிரிப்புடன் நின்ற காட்சியும் அமோகமானதுதான். சமிந்தவாஸ், திலங்க சுமதிபால உட்பட கிரிக்கெட் நிர்வாகிகள், வட்மோர் தம்பதியினர், ஜோன் டைசன் தம்பதியினர், நிதியமைச்சர் சரத் அமுனுகம என்று நிறையவே பேர் முரளியின் திருமண விழாவில் கலந்துகொண்டமை இலங்கை ஒரு பலமான நிலையில் இருந்து கொண்டு தான் இந்திய மணமகளை வரவேற்கிறது என்று சொல்லாமல் சொல்வதுபோல் இருந்தது.

இன்னொருபக்கம் இந்திய கிரிக்கெட் வீரர் ரொபின்சிங் மற்றும் சினிமா நட்சத்திரங்கள், கலைஞர் கருணாநிதி உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டதும் முரளியின் நண்பர்களை வரிக்கும் இயல்புக்குக் கட்டியம் கூறி நிற்கிறது. மொத்தத்தில் முரளியின் திருமண நிகழ்வென்பது அவர் தனது நல்லியல்புகளால் எல்லோருக்கும்போட்ட "பொன் விலங்காகவே" தெரிந்தது. மதிமலர் இலங்கையின் மருமகள்.

பத்திரிகைகளின் முன் பக்கத்தை வழமையாக இல்லாமல் வித்தியாசமானதாகப் பார்க்க விரும்புவோருக்கு சந்தோசமளிக்கவோ என்னவோ; அழகானதொரு புதுமணத் தம்பதியினரின் படம் வெளியாகியிருந்தது. அதுதான் முரளி-மதிமலர் திருமணப் படம்.அனேகமாக கைகளில் தட்டுப்பட்ட அத்தனை மொழிவேறுபாடின்றி வெளிவரும் பத்திரிகைகளிலும் இந்தத் தம்பதியினரின்படம்தான் அட்டகாசமாக வெளிவந்திருந்தது. அத்தோடு திருமணநிகழ்வின் பல படங்களையும் பிரசுரித்திருந்தார்கள்.

பேட்டிகளில் சிறிது வெட்கப்பட்டுக் கொண்டே எதிர் நோக்கிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்துவிட்டார் முரளி.இங்கும் அவரது வெட்கம் நிறைந்த முகம் மதிமலரின் நாணத்துடன் போட்டி போடுகிறது. இலங்கையிலிருந்துநூற்றுக்கு மேற்பட்டவர்கள் மாப்பிள்ளை வீட்டாராக தமிழ் நாட்டில் போய் இறங்கி இருந்தார்கள்.



சுதியோடு லயம் போலவே
இணையாகும் துணையாகும் சம்சார
சங்கீதமே

குறிப்பாக முரளிக்கு உற்றார் உறவினரின் நண்பர்கள் என்ற வட்டத்துக்கு அப்பால் "கிரிக்கெட் குடும்பம்" என்ற உறவுச்சங்கிலி ஒன்று உண்டு.அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு தமிழகத்தில் போய் இறங்கியிருந்தார்கள்.இதில் முதன்மையானவராக அர்ஜுன ரணதுங்கவைக் குறிப்பிடலாம். அவுஸ்ரேலியாவில் முரளியின் பந்து வீச்சு முறைதவறானது என்று நடுவர் றோய் எமர்ஸன் குற்றஞ்சாட்ட ஆக்ரோசம் கொண்ட அர்ஜுன கரங்களை உயர்த்தி எதிர்ப்புத் தெரிவித்திருந்ததை மறக்க முடியாது.

இலங்கை மக்கள் வந்தாரை வரவேற்று உபசரிப்பதில் நம்பர் வண் என்ற பெயர் பெற்றவர்கள். எமது மகளாகும் இவர் இந்த நாட்டு மக்களின் பாசப்பிணைப்பில் திக்குமுக்காடிப் போவார் என்று துணிந்து கூறலாம். இவரது வாழக்கையில் உருவாகும் சந்தோஷங்கள் அனைத்திலும் இந்த நாட்டின் பாசமும் பண்பும் இழை யோடிக் கொண்டிருக்கும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை. இறுதியாக எல்லோராலும் நேசிக்கப்படும் முரளி தன்னை நேசிப்பவர்களுள் முதல்வர் என்ற பதவியை மதிமலருக்குக் கொடுத்துவிட்டார் என்பதும், இனி வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் "சுகமான சுமை"யொன்றை இதயத்தில் சுமக்கத் தயாராகிவிட்டார் என்றும் துணிந்து கூறலாம்.

\- நிர்மலன்.

## வெற்றியில் பல அர்த்தங்கள்

கலிபோர்னியா இன்டியன் வெல்ஸ் WTA ரெனிஸ் சம்பியன் போட்டிகளில் லின்ட்ஸே டெவன் போட் வெற்றிபெறுவார் என்று அவரது முன்னைய வெற்றிகளின் அல்லது **RUNNER UP** நிலையின் மதிப்பீடுகளில் தீர்மானித்தவர்கள் தோற்றுப் போய் விட்டார்கள். ஏனெனில் பெல்ஜியம் நாட்டின் 21 வயதான கிம்கிளிஸ்ரர்ஸ் இவரை 6-4, 4-6, 6-2 என்ற வகையில் தோற்கடித் திருக்கின்றார். இதன் சிறப்பம்சம் இன்டியன் வெல்ஸ் போட்டிகளில் இவர் சம்பியன் கிண்ணம் வென்றிருப்பது இது இரண்டாவது முறையாகும். கிம்கிளிஸ்ரர்ஸ் இதுவரையில் இருபத்திரண்டு மகளிர் ஒற்றையர் பட்டங்களை வென்றவர்.



றொஜர் பெடரர்
முடிவென்பதில்லை

2004 ஆம் ஆண்டின் பல்வேறு ரெனிஸ் போட்டிகளில் இவரால் பங்குபற்ற முடியவில்லை. காரணம் இவரது மணிக்கட்டில் ஏற்பட்ட உபாதையாகும். ஆனால் 2003 ஆம் ஆண்டில் இதே களத்தில் இறுதிப் போட்டியில் லின்ட்ஸே டெவன் போட் இவருடன் போட்டியிட்டு இறுதிப் போட்டியில் தோல்வியுற்றார். இதுவரையில் இந்த ரெனிஸ் வீராங்கனைகள் இருவரும் பதினைந்துமுறை மோதியிருக்கின்றார்கள். இதில் ஒன்பதுமுறை கிம் கிளிஸ்ரர்சும் ஆறுமுறை லின்ட்ஸே டெவன் போட்டும் வெற்றி கண்டிருக்கிறார்கள். இன்னும் இந்த வருடத்தில் எத்தனைமுறை இவர்கள் மோதப் போகிறார்களோ தெரியவில்லை. ஏனெனில் எண்ணிக்கையில் அடங்காத ரெனிஸ் போட்டிகள் வரிசையாக இவர்களுக்காகக் காத்திருக்கின்றன. இருந்தும் இவ்விருவரும் உடல்நலக் குறைபாடுகள் மற்றும் உபாதைகளில் இருந்து தப்பிப்பதே பிரதானமானது.

மறுவளமாக ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப் போட்டியில் சந்தித்துக் கொண்டவர்கள் லெய்டன் ஹெவிட்டும், றொஜர் பெடரரும் ஆவார்கள். பல்வேறு மகளிர் போட்டிகளில் கிண்ணங்கள் பல்வேறு பிரபலங்களின் கைகளில் மாறி மாறி தவழ்ந்து வர, ஆண்கள் ஒற்றையர் கிண்ணங்களோ றொஜர் பெடரின்கைகளில் தான் சங்கமிப்போம் என்று விடாப்பிடியாக நிற்பதுபோல இருக்கிறது.



கிம் கிளிஸ்ரர்ஸ்
புதிய ஆரம்பம்

இவ்வளவு தூரம் கடந்த ஹெவிட் வெற்றிக்கிண்ணம் பெற்றிருந்தால், பல வகைகளில் அவருக்கு ஆறுதலாக இருந்திருக்கும்.

இன்டியன் வெல்ஸ் வெற்றி பெடரரின் இருபத்தி ஆறாவது தனியாள் வெற்றியாகும். மேலும் கடந்துபோன பதினேழு இறுதிப் போட்டிகளில், இந்த வருட அவுஸ்ரேலிய ஓபன் தொடரைத் தவிர வேறு எதிலுமே பெடரர் தோற்கவில்லை. மேலும் கடந்த வருடம் இன்டியன் வெல்ஸ் ஆடவர் ஒற்றையர் கிண்ணத்தை வென்றவரும் இவரே. இந்தவருடம் இவருக்குச் சொந்தமானதாகவே இருக்கும் என்பது விமர்சகர்களின் கருத்து.

\- மக்டலின்.

## சாணேற முழம் சறுக்கும்

**மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பிறைன் லாறா மற்றும் ஆறு வீரர்கள் கேபிள் அன்ட் வயர்லெஸ் நிறுவனத்துடன் விளம்பர ஒப்பந்தங்கள் கொண்டிருப்பவர்கள்.**



சந்தர் போல்
சாதாரண சுமையல்ல


இதற்கிடையில் டிஜிசெல் நிறுவனம் மேற்கிந்தியக் கிரிக்கெட் சபையுடன் செய்து கொண்ட வர்த்தக விளம்பர ஒப்பந்தங்கள் மேற்குறித்த வீரர்களுக்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையே பாரிய சர்ச்சைகளை உருவாக்கியது. இதன் விளைவு புதியதொரு அணி, தலைவர் உட்பட உருவாகும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் பிறைன் லாறாவுடன் கலந்துரையாடிய மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட்சபை லாறாவுடன் ஒரு சமரசம் செய்துகொள்ள முனைந்தது. ஆனால் அதற்குப் பட்டும் படாமலும் லாறா பதில் அளித்துள்ளார். இவரது பதில் கிரிக்கெட்சபைக்கு சாதகமாக அமைந்தால் அணித்தலைமை மீண்டும் இவருக்குக் கிடைத்திருக்கும். இங்குதான் லாறா வித்தியாசமானவராகத் தெரிகிறார். தன்னுடன் இணைந்து எதிரணியாகச் செயற்பட்ட ராம் நரேஷ் சர்வான், கிறிஸ் கைல், பிடல் எட்வேர்ட்ஸ், டுவெய்ன் பிராவோ, டுவெய்ன் ஸ்மித் ஆகியோரை நட்டாற்றில் கைவிட லாறா தயாராக இல்லை. என்னுடன் குறிப்பிட்ட காலம்வரை ஒன்றாகவே விளையாடிய வீரர்களைக் கைவிட நான் தயாராக இல்லை என்பவர், மேற்கிந்தியத் தீவுகள் அணி அதிதிறமை வாய்ந்த வீரர்கள் கொண்ட அணியாக விளங்கினால் மட்டுமே அதில் ஒரு அர்த்தமும் இருக்கமுடியும் என்கிறார்.

இந்த நிலையில் சர்ச்சைக்கான தீர்வு எட்டுவதென்பது சாத்தியமில்லாத தொன்றாகவே காணப்படுகிறது. எனவே மேற்கிந்தியக் கிரிக்கெட்சபை அடுத்தகட்டமாகப் புதிய தலைவர் உட்பட மேற்கிந்தியக் கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்துள்ளது. இதன்படி கயானாவின் சந்தர்போல் அணித்தலைவராகவும், கோர்ட்னி பிறவுண் உப தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டு ஏனைய வீரர்கள் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

வேவல்ஹைன்ட்ஸ், டெவொன் ஸ்மித், டொனவொன் பகன், டன்சிங் டியோ நாரெய்ன், டரன் கங்கா, றயான் ஹைன்ட்ஸ், கோரி கொலி மோர், பேட்ரோ கொலின்ஸ், டுவைற் வோஷிங்ரன், டரன் பவல், ஜெரோம் டெய்லர், றியோன் கிங் ஆகியோரே அவர்கள்.

\- செந்தூரன்.



பிறைன் லாறா
முடியவே முடியாது

# பாட்டும் நானே பாவமும் நானே

ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்தமை, ஒருநாள்போட்டிகளில் அதிக சதங்கள் பெற்றமை, டெஸ்ட் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்கள் கடந்தமை என்று பல சாதனைகளை கைவசம் வைத்திருக்கும் இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் - நடுவர்களின் தவறான தீர்ப்புக்களால் பல தடவைகள் பாதிப்படைந்ததிலும் சாதனை படைத்திருக்கிறார் என்றால் அது மிகையில்லை. கொல்கத்தா டெஸ்ட்டின் இரண்டாவது இனிங்ஸில் நடுவர் ஸ்ரீவ் பக்னர் அளித்த தவறான தீர்ப்பின் மூலம் இது இன்னொரு தரம் புலனாகியுள்ளது.


ஸ்ரீவ் பக்னர் மயக்கமா? கலக்கமா?

பல அணிகளோடு பல சந்தர்ப்பங்களில் அவருக்குத் தவறான தீர்ப்புகள் வழங்கப்பட்டாலும், குறிப்பாக கடந்த வருடங்களில் இந்திய அணி அவுஸ்ரேலியாவுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட சந்தர்ப்பங்களில் இவ்வாறு நான்கு தடவைகள் சச்சின் தவறான முறையில் ஆட்டமிழந்துள்ளார். அதிலும் 2003/04 காலப்பகுதியில் கடைசியாக அவுஸ்ரேலியாவுக்குச் சென்றிருந்த போது பிரிஸ்பேனில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியிலும் இதே ஸ்ரீவ் பக்னர் தான் சச்சினுக்கு சர்ச்சைக்குரிய முறையில் LBW தீர்ப்பொன்றை வழங்கியிருந்தார். ஜேஸன் ஜிலெஸ்பியின் பந்தொன்றை சச்சின் எதிர்கொண்ட போது அந்தப்பந்து அவரது கால்காப்பு மட்டைக்கு மேலாகப் பட்டபோதிலும் ஜிலெஸ்பியின் அரைமனதுடனான முறைப்பாட்டையடுத்து டெண்டுல்கர் ஆட்டமிழந்ததாக பக்னர் தீர்ப்பளித்தார்.

தொலைக்காட்சி Reply டெண்டுல்கர் ஆட்டமிழக்கவில்லை என்பதையும் அந்தப் பந்து விக்கெட்டுக்கு வெளியே செல்வதையும் தெளிவாக காட்டிய நிலையில் பக்னரின் இந்தத்தீர்ப்புக்கு எதிராக அவுஸ்ரேலிய பத்திரிகைகள் அவரை மிகவும் கடுமையாகச் சாடியிருந்தன. ஆனாலும் இந்தத்தீர்ப்புக் குறித்து எழுந்துள்ள விமர்சனங்களைத்தான் பெரிது படுத்தப்போவதில்லை யென சட்டாம்பிள்ளைத்தனமாக கருத்துத் தெரிவித்த பக்னர் - இப்போது கொல்கத்தா டெஸ்டில் சச்சினுக்கு தவறான தீர்ப்பு வழங்கியதற்காக வருத்தம் தெரிவித்துள்ளதுடன், அந்தத் தவறை நினைத்துப் பார்க்கும் போது மிகவும் சங்கடமாக இருப்பதாகவும் கருத்து வெளியிட்டுள்ளார்.


சச்சின் டெண்டுல்கர் கலங்காதே மனமே

டெண்டுல்கரைப் பொறுத்தவரையில் Caught Behind முறையில் ஆட்டமிழக்கும் சந்தர்ப்பங்களில், நடுவரின் தீர்ப்பை எதிர்பாராமலே ஆடுகளத்தை விட்டு வெளியேறிவிடுவார். இதற்குப் பல உதாரணங்களை எடுத்துக் கூறலாம். குறிப்பாக 2002 இங்கிலாந்தில் நடைபெற்ற NATWEST தொடரில் இலங்கையுடனான ஒரு போட்டியில் 49 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது பந்து துடுப்பில் லேசாக உரசிச் சென்று விக்கெட் காப்பாளரிடம் சென்ற போது, தனது அரைச்சதத்தையும் பொருட்படுத்தாமல், நடுவரின் தீர்ப்பையும் எதிர்பாராமல் உடனேயே பவிலியன் திரும்பியவர் அவர்.

ஓட்டங்கள் எப்போதும் குவிக்கலாம். ஆனால் ஒரு வீரரின் மகோன்னத பண்புகள் வெளிப்படுவது இந்த மாதிரியான நேரங்களில்தான். அந்த நிலையில் இருந்து சச்சின் என்றுமே தவறியதில்லை.

எனவே அப்துல் ரசாக் ஆட்டமிழப்புக் கோரி, பக்னர் தீர்ப்புக்கூற எடுத்த நேரத்துக்குள் பந்து மட்டையில் பட்டிருந்தால் அவராகவே சென்றிருப்பார்.

பக்னர் நூறாவது டெஸ்ட் போட்டியில் நடுவராக பணிபுரிவதற்காக தனிப்பட்ட முறையில் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்த சச்சின் டெண்டுல்கருக்கு பிரதியுபகாரமாக நல்ல கைமாறு செய்துள்ளார் பக்னர். தனது நூறாவது டெஸ்ட் போட்டியைப் பெரும் எடுப்புடன் ஆரம்பித்த பக்னர் அதனை ஒரு கரும் புள்ளியுடன் முடித்துவிட்டார். இப்போது சச்சினின் சாதனைகளுக்கு முழங்கை ஒத்துழைப்புக் கொடுத்த போதிலும் நடுவரின் சுட்டு விரல் அதனை பலியெடுத்துவிட்டது.

**- விமலன்.**

# தூரத்தில் இல்லை பாலைவனம்

சிம்பாப்வே, பங்களாதேஷ் இரு நாடுகளும் சர்வதேச கிரிக்கெட் தரவரிசையில் இருவகை ஆட்டங்களிலும் மிகவும் தாழ்வான நிலையில் காணப்படுகின்றன. இந்த நிலையில் வரலாறு மீண்டும் திரும்புகிறது என்கிறார்கள் விமர்சகர்கள். அதாவது கிரிக்கெட் - பலம் வாய்ந்த நாடுகள் கிரிக்கெட் ஆட்டத் தொடர்களை தமக்கேற்றவாறு நிர்ணயிக்க முயல்கின்றன. இந்தவகையில் மேற்கண்ட இரு நாடுகளையும் இயன்றவரையில் சந்திப்பதைத் தவிர்த்துக்கொள்ள முனைவது தெரிகிறது. இதற்குப் பிரதான காரணம் சர்வதேச கிரிக்கெட் வர்த்தகமயப்பட்டுப் போயிருப்பது தான்.


ஹபிபுல் பசார் ஒளிபாச்சுங்கள்

வர்த்தகத்தில் யாரும் நட்டப் படவிரும்புவதில்லையல்லவா. எனவே கேள்வி குறைந்த பொருளுக்கு சந்தைவாய்ப்பு இருக்காது. இந்த நிலை வளரத்துடிக்கும் கிரிக்கெட் நாடுகளை முன்கூறிய இரண்டு நாடுகளுக்கும் படுபாதகமாக இருக்கப்போகிறது என்பது உண்மை தான்.

ஏனெனில் பிரபல்யமான கிரிக்கெட் வீரர்கள் தொடர்ச்சியான விளையாட்டால் தாம் பாதிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். ஆகவே ஓய்வை நாடுகிறார்கள். இந்த ஓய்வு என்பது பாதிக்கப்போவது கீழ்வரிசை இரண்டு நாடுகளையும்தான். ஒன்றில் அவர்களுக்குத் தொடர்கள் கிட்டாமற்போகும் அல்லது இரண்டாம் நிலை அணிகளை அவர்களது பயிற்சிக்கு வாய்ப்பாக இவர்கள் சந்திக்க நேரிடும்.

இந்தக் கசப்பான அனுபவம் இலங்கைக்கு நிறையவே உண்டு. இலங்கை டெஸ்ட் அந்தஸ்துப் பெற்றகாலத்தில் இருந்து, பத்தாண்டுகளில் விளையாடிய டெஸ்ட் ஆட்டங்கள் முப்பத்தெட்டு மட்டும்தான். இந்தக் கால கட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இலங்கை என்றொரு டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடு இருக்கிறதே என்று சட்டை செய்யவே யில்லை. முதலாவது டெஸ்ட் இங்கிலாந்து அணியுடன் நடைபெற்றது. அதன் ஏதோ மூன்றே மூன்று ஆட்டங்கள் தான் இங்கிலாந்து இலங்கைக்காக வழங்கியிருந்தது. இந்தளவு தூரத்துக்கு இலங்கை புறக்கணிக்கப்பட்டது. இருந்தாலும் இலங்கையின் அயல் நாடுகளான இந்தியாவும், பாகிஸ்தானும் மட் டுமே இலங்கையின் பக்கம் பார்வையைச் செலுத்தின. முன் குறிப்பிட்ட பத்தாண்டுகளில் இந்த இரண்டு நாடுகளும் இருபதுக்கு மேற் பட்ட டெஸ்ட் ஆட்டங்களை இலங்கைக்குக் கொடுத்தன. இதனால் தானோ என்ன முதல் இரண்டு டெஸ்ட் வெற்றிகளும் இவர்களுக்கு எதிரானதாகவே அமைந்தது.


ஹீத் ஸ்ரீக் வருக வருக

இன்று இலங்கையின் நிலை மாறிவிட்டது. ஆனால் மன உளைச்சலுக்கு உள்ளாகும் நாடுகள் பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகள்தான். ஏனெனில் இந்த இரண்டு நாடுகளுக்கும் தாயகத்துக்கு வெளியே தொடர்கள் கிடைக்கப் போவதில்லை. இத்தகைய தொடர்களால் மட்டுமே சரியான சர்வதேச அனுபவங்கள் கிடைக்குமென்றால், அந்தச் சந்தர்ப்பம் மறுக்கப்படுவதன் மூலம் வஞ்சிக்கப்படுகின்றன என்பது மறுக்கமுடியாதது. இது இவர்களுக்கு எதிரான அநீதியல்லவா.

இந்த நிலையில் பத்து டெஸ்ட் அந்தஸ்துப்பெற்ற நாடுகளுக்குப் புறம்பாக இருபத்தாறு ASSOCIATE MEMBER நாடுகள் ICC யில் அங்கம் வகிக்கின்றன. மேலும் ஐம்பத்தைந்து நாடுகள் ICCயுடன் இணைக்கப்பட்ட கிரிக்கெட் விளையாடும் நாடுகளாக உள்ளன. இந்தப் பெரிய குடும்பத்தை ICC என்னவென்று ஒரே தரத்துக்கு உயர்த்தப்போகிறது? உதைபந்தாட்டம் பொறுத்து சமபலம் கொண்ட நாடுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, கிரிக்கெட் பொறுத்து இரட்டை இலக்கத்துக்கு வரக்கூடிய அளவில்கூட நிலைமை இல்லை. எனவே எதிர்காலம் இந்தப் பத்து நாடுகளுக்குள் (அல்லது எட்டு) தானா.

**- ஜோசப் கிருஷ்ணா.**

# ஏழாவது மனிதன்


கிறிஸ் ஒகயின்ஸ் நட்சத்திரம்

எதிரணி ஒன்றை உளவியல் ரீதியில் நசித்துப் போகச் செய்யக்கூடிய கிரிக்கெட் வீரர் ஒருவர் யாரென்றால் அவர் அவுஸ்திரேலிய வீரர் அடம் கில்கிறிஸ்ட் தான். இதற்கு ஒரு உதாரணம் மிக அண்மையில் நடைபெற்றதை எடுத்துக் காட்டலாம். அவுஸ்ரேலிய - நியூசிலாந்து டெஸ்ட் ஆட்டத்தில் நியூசிலாந்தின்433 ஓட்டங்களுக்குப் பதிலளித்து ஆடிய அவுஸ்ரேலியா ஆறு விக்கெட் இழப்புக்கு 201 ஓட்டங்களுடன் follow on ஐத்தவிர்க்க இன்னும் 33 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இருந்தபோது களம் இறங்கினார் கில்கிறிஸ்ட். முடிவு? 126 பந்துகளில் பன்னிரெண்டு பவுண்டரிகள், ஆறு சிக்சர்கள் அடங்கலாக 121 ஓட்டங்களைக் குவித்துவிட்டு இன்னொரு சிக்சர் அடிக்கப் போய் எல்லைக் கோட்டில் பிடிகொடுத்து அவுட்டாகியபோது, அவுஸ்ரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கை ஏழு விக்கெட் இழப்புக்கு 413.

இப்படி ஒருவர் இருக்க எதிரணி தலைதூக்க முடியுமா? கிரிக்கெட் வரலாற்றில் ஏழாவது துடுப்பாட்ட வீரராக உள் நுழைந்து அதிரடியாக ஆடி சதங்கள் குவிப்பதற்கு இவருடன் ஒப்பிட வேறு யாரும் இல்லை என்று கருதப்படுகின்றது.

1999ல் பிரிஸ்பேனில், பாகிஸ்தானுக்கு எதிராக தனது சர்வ தேச கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பித்தபோது, துடுப்பாட்ட ஆற்றல் நிறைந்த விக்கெட் காப்பாளர் என்ற பெயருக்கு ஒரு புதிய இலக்கணம் வகுத்தார்.

அவுஸ்ரேலியாவுக்கு விளையாடிய அறுபத்தாறு டெஸ்போட்டிகளில் கில்கிறிஸ்ட் ஐம்பத்தொரு ஆட்டங்களில் தன் பங்கை உறுதிப்படுத்தியுள்ளார். இந்தத்தரவில் பதினான்கு செஞ்சரிகள் 4230 ஓட்டங்கள் சராசரி 53.54. டெஸ்ட் வரலாற்றில் ஏழாவது வீரராக இறங்கும் ஒருவரது இந்தத் தரவை நம்பமறுத்தால் அது தவறல்ல. கில்கிறிஸ்ட் அடித்த வேகமான பத்து செஞ்சரிகளில் ஆறு ஏறத்தாழ பந்துகளும், ஓட்டங்களும் மிக அருகில் இருப்பதைக் கொண்டதாக அமைவதைக் காணலாம். அதோடு 2002இல் இவர் அடித்த 200 ஓட்டங்கள் (இரட்டைச் சதம்) 212 பந்துகளில் மட்டும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இன்னொரு சாதனையும் இவரைப் பொறுத்து உண்மையாகப்போகிறது இன்னொரு சிறப்பு. அதிக டெஸ்ட் சிக்ஸர்கள் அடித்த வீரர்கள் வரிசையில் இவர் மூன்றாவதாக இருக்கிறார். முதலிடம் நியூசிலாந்தின் கிறிஸ் கெயின்ஸ் (87). இரண்டாவது இடம் மேற்கிந்தியத் தீவுகளின் விவியன் றிச்சட்ஸ் (84) கில்கிறிஸ்ட் 79. (நியூசிலாந்துக்கு எதிரான 2வது டெஸ்ட் சேர்த்து)


கில் கிறிஸ்ட் மனிதம் மலர்கிறது

இவரது திறமையை வியக்கும் எவரும் சிக்சர்களில் முதல் சதம் அடிக்கும் வீரர் என்ற செய்தியையும் விரைவில் அறிவார்கள். இவற்றுக்கெல்லாம் அப்பால் கில்கிறிஸ்டின் இன்னொரு முகம் உண்டு. சுனாமி அனர்த்த நிவாரண கிரிக்கெட் ஆட்டம் முடிந்த பின் கருத்துக்கூறிய இவர் - இயற் கையின் ஒரு சீற்றச் சம்பவத்தால் தான் எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவது என்பதல்ல.

நீண்ட காலத்தில் செய்யப்பட வேண்டியவற்றையும் யோசிக்கவேண்டும். உதாரணமாக ஆபிரிக்காவில் ஆயிரக்கணக்கானவர்கள் போஷாக்கின்மை மற்றும் பலவித நோய்களால் இறக்கிறார்கள் என்று விபரித்துக் கொண்டு போயிருக்கிறார். எனவே 2007 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் பின்பு இவரது பணி என்னவாக இருக்கப்போகிறது என்பதை இப்போதே இவர் கோடிட்டுக் காட்டுகிறார் என்று கொள்ளலாமா?

**- அன்ரனி.**





யாழ்ப்பாணம்

# பளை - இத்தாவில் பகுதியில் - அரும்பொருட் காட்சியகம் திறப்பு

ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையின் மூலம் ஆனையிறவு மீட்புக்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களை நினைவு கூரும் வகையில், தேசியத் தலைவரின் சிந்தனைக்கமைய இத்தாவில் பகுதியில் அரும்பொருட் காட்சியகம் நேற்று வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஏற்றி வைத்தார்.

இதில் தமிழீழத் தேசியக் கொடியை கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றிவைத்தார்.


தொடர்ந்து மாவீரரின் திருவுருவப்படங்களுக்கான ஈகச்சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் நிலமீட்பு கல்வெட்டை - தமிழீழ அரசியற்துறைப் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வட போர்முனைத் தளபதி ஜெரி ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

அரும்பொருட் காட்சியக மண்டபத்தை கட்டளைத் தளபதி கேணல் தீபன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் தலைமையுரையை அரும்பொருட் காட்சியகப் பொறுப்பாளர் ஆதித்தவர்மன் நிகழ்த்தினார்.

இதில் நினைவுரைகளை பளை கோட்டக்கல்வி அதிகாரி இராமலிங்கம் நிகழ்த்தினார். சிறப்புரையை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் நிகழ்த்தினார். (க)





வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சாரணர் தின நிகழ்வில் - வவுனியா மாவட்ட அரச அதிபர் சி. சண்முகம் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், அந்த நிகழ்வில் வவுனியா கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.பொன்னையா மரம் நாட்டுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். படம் . கனகரவி

## பெரியபாலம் புனரமைப்பு

மன்னார் - பெரியபாலம் என அழைக்கப்படும் சங்கிலிப்பாலத்தை 260 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பதற்கு ஜப்பான் நிறுவனம் முன் வந்துள்ளது.

மன்னார் பிரதேசத்தின் பிரதான பாலமான இந்தப்பாலம் - நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது சேத முற்றுக் காணப்படுகிறது.

இந்த நிலையில் ஜப்பான் நிறுவனம் 260 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்க முன் வந்துள்ளதுடன், இரண்டு வருடங்களுக்கு சுமுகமான நிலை தோன்றும் போது, இந்தப்பாலம் புனரமைக்க முடியும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## நோயாளர்கள் எண்ணிக்கை கிளிநொச்சியில் திடீரென உயர்வு

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நோயாளர்களின் தொகை திடீரென அதிகரித்துள்ளன.

தற்போது நிலவும் வெப்பக் கால நிலை காணமாகவும், காற்று மூலம் பரவும் சுவாசத் தொற்று நோய்கள் காரணமாகவும் நாள்தோறும் 600 வரையான நோயாளர்கள் - கிளிநொச்சி வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

அத்துடன் உள்ளக விடுதியில் 150 பேர் வரையான நோயாளர்கள் இட நெருக்கடிக்கு மத்தியிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படும் நோயாளர்களின் தொகையும் அதிகரித்துள்ளன.

இந்த மருத்துவமனையின் அம்புலன்ஸ் - ஒரு நாளைக்கு நான்கு தடவைகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களை எடுத்து வருவதைக்காண முடிகிறது.




## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### மார்ச் 27

1899 : வானொலி ஒலிபரப்பு - மார்க்கோணியால் முதன்முதல் உலக அளவில் பரசோதித்துப் பார்க்கப்பட்டது.

1914 : பெல்ஜியம் நாட்டில் பிரஸ்ஸலில், மருத்துவமனை ஒன்றில் முதன் முதலாகப் பதப்படுத்தி வைக்கப்பட்டிருந்த இரத்தம் ஏற்றப்பட்டு நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

1933 : சர்வதேச நாடுகள் சபை (LEAGUE OF NATIONS) கலைந்து போவதற்குரிய காரணிகளுள் முதலாவது காரணியாக, இருந்த ஜப்பான் இந்தச் சபையை விட்டு வெளியேறியது. ஜப்பான் மஞ்சூரியாவில் எடுத்த இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித்து இந்த அமைப்பு அறிக்கை வெளியிட்டமையே இதற்குக் காரணமாகும்.

1964 : ஐக்கிய நாடுகளது சமாதானப்படை, சைப்பிரஸ் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக அங்கு சென்றடைந்தது.

1968 : விண்வெளியில் பறந்த முதல் ரஷ்ய விண்வெளி வீரர் யூரிககாரினும், இன்னுமொரு விண்வெளி வீரரான விளாடிமிர் செரியோஜினும் விமான விபத்தொன்றில் இறந்து போயினர்.

1969 : அமெரிக்காவால் மரீனர் - 7 என்ற விண்கலம் செவ்வாய்க் கிரகத்தை நோக்கிச் செலுத்தப்பட்டது. இது செவ்வாய்க் கிரகத்துக்கு அருகில் 3530 கி.மீ தூரம் சென்றது.

1972 : ரஷ்யாவால் வெள்ளிக் கிரகத்தை நோக்கி வெனீரா - 8 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது. இது வெள்ளிக்கிரகத்தில் வெற்றிகரமாக இறங்கிய இரண்டாவது விண்ணூர்தியாக அமைந்தது.

1977 : அத்திலாந்திக் சமுத்திரத்திலுள்ள டினீரைப்ட் தீவின் "சாந்தாக் குரூஸ்" விமான நிலையத்தின் ஓடு தளத்தில், பனிமூட்டம் காரணமாக புறப்படத் தயாராகிய இரண்டு பயணிகள் விமானங்கள் மோதி வெடித்துச் சிதறியநாள். 582 பேர் உடல்கருகி மாண்டனர்.

1980 : நோர்வே நாட்டின் கரையில் இருந்து 275 கி.மீ தூரத்தில் - கடலில் நங்கூரமிட்டிருந்த மிதக்கும் ஹோட்டல் ஒன்று விபத்துக்குள்ளாகி, 30 மீற்றர் ஆழத்தில் அமிழ்ந்து போனது. 4 சென்ரிகிரேட் வெப்பநிலையே காணப்பட்ட அந்தக் கடலில் பலர் உயிரிழந்தனர்.

◈ சர்வதேச நாடக தினம்.

தொகுப்பு - சந்துரு

## முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் 800 பெண்கள் கணவன்மாரை இழந்தனர்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தில் 800 பெண்கள் தமது கணவன்மாரை இழந்துள்ளனர் என, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

சுனாமி கடல் அனர்த்தம் ஏற்பட்டு மூன்று மாதங்கள் நிறைவடைந்த நிலையில் - அவர் இத்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - கடந்தகால போர் நடவடிக்கை காரணமாக எமது மாவட்டத்தில் 3,300 பெண்கள் கணவன்மாரை இழந்துள்ளனர். சுனாமி கடல் அனர்த்தம் நிகழ்த்திய கொடூரத்தால் 800 பெண்கள் கணவன்மாரை இழந்துள்ளனர்.

கடந்த காலப் போரின்போதே பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட கணவன்மாரை இழந்த பெண்கள் - தற்போது பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு பல செயற்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 1825 பேர் மாற்றீடான வலுவுள்ளோர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 1,825 பேர் மாற்றீடான வலுவுள்ளோர் என, கிளிநொச்சி மாவட்ட மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மாவட்டத்தில் 1,031 ஆண் மாற்றீடான வலுவுள்ளோரும், 794 பெண் மாற்றீடான வலுவுள்ளோரும் உள்ளனர் எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதில் பூநகரி பிரதேச செயலகப் பிரிவில் 405 மாற்றீடான வலுவுள்ளோரும், கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் 699 மாற்றீடான வலுவுள்ளோரும், கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் 433 மாற்றீடான வலுவுள்ளோரும் உள்ளனர் என இச் சங்கம் தெரிவித்தது.

## குடும்பம் ஒன்றுக்கு தலா 5 ஆயிரம் ரூபா

மன்னார் - திருமறைக் கலாமன்றத்தினர் சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று உதவிப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்குச் சென்ற இவர்கள் தற்போது மாத்தறை மாவட்டத்துக்குச் சென்று, அங்கு பாதிக்கப்பட்ட பெரும்பான்மை இனத்தவருக்கு உலர் உணவுப் பொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கினர்.

மேலும் கல்விச் செலவுக்கென குடும்பம் ஒன்றுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வரை வழங்கினர்.

## பாண்டியன்குளம் பிரதேசத்தில் எழுச்சிப் பேரவைக் கலந்துரையாடல்

பாண்டியன்குளம் பிரதேசத்தின் தேசிய எழுச்சிப் பேரவைக்கான கலந்துரையாடல் அண்மையில் - பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில், பாண்டியன்குளம் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சி.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பணிமனை பிரதம லிகிதர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை பாண்டியன்குளம் பிரதேச பொறுப்பாளர் சி.இலக்கியன் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வின் கலந்துரையாடலை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அ.தனிநாயகம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை லிகிதர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் ஈழவன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில் மண்அரண்களை அகற்றுவதற்கு நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட 55 கிலோமீற்றர் நீளமான கைவிடப்பட்ட மண் அரண்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக வவுனியா மன்னார் வீதியில் 18 கிலோமீற்றர் பகுதியிலுள்ள குருக்கள்புதுக்குளம் பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட மண் அரண்கள் அகற்றும் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1997 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது மன்னார் வீதிக்கு சமாந்தரமாக அமைக்கப்பட்ட அரண்களை அகற்றுவதற்கு கிலோமீற்றர் ஒன்றுக்கு 3 லட்சம் ரூபா வரை தேவையாகும் என மதிப்பீடு செய் யப்பட்டுள்ளது.

இராணுவ பாதுகாப்பு வலயத்திலுள்ள அரண்கள் இதற்குள் உள்ளடக்கப்படவில்லை.

## தாய் - சேய் போசாக்கு நிலைய திறப்பு விழா

(அக்கராயன்)

நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன், 8 ஆம் கட்டை- ஆரோக்கியபுரம் அக்கராயன் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட அன்பு தாய் - சேய் போசாக்கு நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா - எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 11 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தமிழீழ அரசியற்துறைப் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்.
திருக்குறள்

# நமது நோக்கு

## அரசு நல்லது எதையும் செய்யப்போவது கிடையாது

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து மூன்று மாதங்கள் கழிந்துள்ள நிலையில், அந்த அவலத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் மற்றும் புனர்வாழ்வு புனர்நிர்மாணச் செயற்பாடுகள் இன்னமும் முழுமையான வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது கசப்பான உண்மையேயாகும்.

வரலாறு காணாத இழப்புகளுக்கும் இன்னல்களுக்கும் உள்ளான மக்களின் துயர்துடைப்பு பணிகளில் அரசியல் ஆதாயம் தேடமுனையும் அரசாங்கமும், அதனை அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளும், உள்முரண்பாடுகளுள் சிக்கி மக்களுக்கான கடமைகளை துரிதப்படுத்தாது தாமதப்படுத்தி இழுத்தடிக்கும் அசிங்கம் தொடர்வது வேதனைக்குரியதாகும்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்தது முதல் பாதிக்கப்பட்ட மக்களுக்கென உதவிக்கரம் நீட்டிய சர்வதேச சமூகம் பல்வேறு வகையிலும் தமது மனிதாபிமானப் பணிகளை - மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விரைந்த வேகத்துடன் ஒட்டி இயங்க அரச இயந்திரம் அக்கறை கொள்ளவில்லை என்பது வெளிப்படையான விடயமாகும்.

அள்ளிவழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களையே ஆத்ம சுத்தியுடன் அவலப்படும் மக்களுக்கு பகிர்ந்தளிக்க அரசியல் முரண்பாடுகளைப் புறந்தள்ளிவிட்டு மனிதாபி மானத்துடன் முன்வர மறுக்கும் அரசாங்கத்தையும், ஆட்சித்தலைமையும் என்ன வென்று சொல்வதாம்?

பாதிக்கப்பட்ட ஒரு மக்களையும், அழிவுற்ற ஒருபகுதிப் பிரதேசத்தையும், அரசியல் உள்நோக்கத்துடனும் மாற்றான் தாய் மனப்பான்மையுடனும் நிவாரண உதவிகளை வழங்குவதிலும், மீள்கட்டமைப்புப்பணிகளை மேற்கொள்வதிலும் இன, மத அடிப்படையில் பாரபட்சம் காட்டி புறமொதுக்கும் அதியுயர் அதிகாரப் பலம் கொண்ட தலைமைக்கு அந்தப் பிரதேசங்களையும், அந்த மக்களையும் ஆளும் உரிமை எள்ளளவும் இல்லையென்றே கூறவேண்டும்.

நாம் மேலே குறிப்பிடுவது தமிழ் மக்களையும் அவர்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசமான வடக்கு - கிழக்குப் பகுதியையும் தான். இந்தப் பிரதேசங்களையும் இங்கு வாழும் மக்களையும் அரசு எவ்வாறு மதிக்கிறது என்பதற்கு கடந்த மூன்று தசாப்தகால வரலாறே சான்றுபகரும்.

உலகமே பதைபதைத்து உதவ ஓடோடி வரும் நிலையிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நிவாரணத்தை வழங்க அதுவும் சர்வதேசம் உணர்வுடன் அள்ளி வழங்கிய உதவிகளை பகிர்ந்துகொடுக்க மூன்று மாதங்கள் ஆகியும் மனமற்றிருக்கும் ஆட்சிப்பீடத்தவரின் மனிதநேயம் சந்தேகத்துக்குரியதே ஆகும்.

நிவாரண மற்றும் மீள்கட்டுமானப்பணிகளை முன்னெடுக்க ஒரு பொதுக்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ள நிலையில் அதனை சர்வதேச சமூகம் வலியுறுத்தி வரும்சூழலில், அதனை அமைக்க கடந்த ஒரு மாத காலமாக இழுத்தடிப்புகளை மேற்கொண்டுவரும் அரசாங்கம் நாளுக்குநாள் அதுதொடர்பாக மாறிமாறி அவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் முரண்பாடுகளுடன் கூடிய அறிக்கைகளை விடுத்தவண்ணம் மோதிக்கொள்வதைப் பார்க்கும் போது, இதெல்லாம் சாத்தியமாகுமா என்பதும், சாத்தியமானாலும் நேர்மையாக நடைமுறைப்படுத்தப்படுமா என்பதும் சந்தேகமேயாகும்.

ஜனாதிபதி ஒன்றைக் கூறுகிறார். ஆனால், ஜனாதிபதி செயலகம் அதனை மறுக்கிறது.

கதிர்காமர் ஒன்றைக் கூறுகிறார். ஜே.வி.பி அதை நிராகரிக்கிறது. ஜே.வி.பி ஒன்றைக் கூறுகிறது. ஜனாதிபதி அதைத் கண்டிக்கிறார்.


இப்படி அரசுக்குள்ளேயே ஆளையாள் பேய்க்காட்டி "காய்" வெட்டும் செயற்பாடுகள் தீவிரமடைந்திருக்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்டவரான ஜனாதிபதி என்ன நடந்தாலும் தனது பதவிக்காலம் பாதுகாப்பாக இருந்தால் போதும் என்ற இலக்குடன் முக்கியமான பிரச்சினைகளுக்குக் கூட தீர்வுகாணும் முனைப்பின்றி காலத்தை இழுத்தடிக்கும் மூலோபாயங்களைக் கையாண்டு வருகிறார்.

இவற்றையெல்லாம் பார்க்கையில் - இவர்கள் எல்லோருமே ஒருவருக்கொருவர் முரணாகப் பேசிக்கொண்டு, சொல்லிவைத்தபடி இயங்குகிறார்களோ என்ற சந்தேகம் எழுவதும் தவிர்க்கமுடியாததாகியுள்ளது.

எதுவானாலும் ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. இந்த ஜனாதிபதியோ, அரசோ தமிழ்மக்களின் எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கும் திறனோ, விருப்போ கொண்டதாக இல்லை என்பதே அதுவாகும்.

"உனக்கும் பெப்பே... உன்அப்பனுக்கும் பெப்பே" என தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஜனாதிபதியும் அரசும் கூறும் காலம் வெகுதூரத்தில் இல்லைப்போல் தெரிகிறது.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# கிடைக்கவேண்டியதைத் தடுப்பவர்கள் எதைச் செய்தனர் செய்யமுடியும்?

என்ன எதுவும் சரிவராது போலிருக்கே பொதுக்கட்டமைப்பும் உருப்படுவதுபோலில்லை! இடைக்கால நிர்வாகத் தன்னாட்சி அதிகாரசபைப் பேச்சையும் காணோம்! எதையும் இதுவரை சிங்கள, பௌத்த மேலாண்மை வாதிகளிடமிருந்து கேட்டுப்பெற்றதாக வரலாறு இலலை. இனியும் எதுவும் கேட்டுப்பெறமுடியுமென்ற நம்பிக்கையும் இல்லாதுபோய்விடுமென்றே தோன்றுகிறது என்று சொல்லியபடியே வந்து உட்கார்ந்தர் பரமசிவம்.

முற்றாக நம்பிக்கையை இழந்துவிட்டீர் போலிருக்கிறதே என்றேன்.

நான் மட்டுமல்ல என்னைப்போல் பலர் இப்படித்தான் நம்பிக்கையை இழந்துகொண்டிருக்கின்றனர் என்றார் பரமசிவம்.

கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்கள் வடக்கு–கிழக்கில் அதிகம். இன்னமும் பலர் கூடாரங்களிலும் கொட்டில்களிலும் அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். தொழில்செய்யவும் முடியவில்லை. கோடி கோடியாக வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்த பணமெல்லாம் எங்கே? நாங்கள் இன்னமும் கூடாரங்களிலும், கொட்டில்களிலும்தான் வாழ்ந்துகொண்டிருக்க வேண்டுமா? இப்படி மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் கொடுப்பதைத்தான் நாங்கள் கொடுக்கமுடியும். அரசாங்கம் சொல்வதைத்தான் நாங்கள் உங்களுக்குச் சொல்லமுடியும். அவர்கள் சொல்வதைத்தான் நாங்கள் உங்களுக்குச் செய்யமுடியும் என்று அரசாங்க உத்தியோகத்தர்கள் சொல்லுகிறார்கள் என்றேன்.

பொதுக்கட்டமைப்பு உருவாகப் போகிறது. அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் வடக்குக் கிழக்கில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கவும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைக்கவும் இணைந்து திட்டம் வகுத்துச் செயற்படுத்துவதற்காக முதலில் பேச்சுவார்த்தை நடத்துவதாகச் செய்திகள் வெளிவந்தன. இதில் இரு தரப்பும் பொதுவாக ஒரு திட்டம் வகுப்பதற்கு இணங்கிப் போகவில்லையென்று செய்திகள் தெரிவித்தன. இதன்பின் இலங்கை இனப்பிரச்சினையில் இரு தரப்புக்குமிடையில் சமாதானப் பேச்சு நடத்துவதற்கு உதவி செய்யவந்த நோர்வேக்காரர்கள் கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு இரு தரப்பையும் இணங்கிப் போகச் செய்வதற்கு ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்தனர். இதைப் பரிசீலித்த விடுதலைப் புலிகள் இதில் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத சில அம்சங்களிருந்தாலும் அவலப்படும் மக்களுக்கு உதவி கிடைக்கவேண்டுமென்பதற்காக அதை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தனர். இதன்பின்பு பரிசீலணை செய்த அரசுத் தரப்பு இன்னமும் அது பற்றி முடிவு சொல்லவில்லை என்றார் பரமசிவம்.

ஆனால் இந்தத் திட்டத்தைப் பார்த்தார்களோ பரிசீலனை செய்தார்களோ அல்லது இது பற்றி யாரடமாவது கேட்டார்களோ தெரியவில்லை ஜே.வி.பியும் ஹெல உறுமய என்ற அரசியல் பிக்குகளும் எதிர்க்கிறார்கள் என்றேன்.

அவலப்படும் மக்கள் என்றால் என்ன, அவர்கள் வடக்கு–கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள்தானே. எனவே இவர்கள் பற்றி விடுதலைப் புலிகளுடன் எந்தப் பேச்சும் பேசக்கூடாது. இவை பற்றிய எந்தத் திட்டத்தையும் அரசாங்கம் ஏற்கக்கூடாது என்று ஜே.வி.பி. எதிர்த்து நிற்கிறது. ஹெல உறுமய தனது எதிர்ப்பில் ஒரு திருத்தம் செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறது. பொதுக்கட்டமைப்பு சம்பந்தமாக வடக்கிலுள்ள மக்கள் பற்றி புலிகளுடன் பேசலாம் கிழக்கிலுள்ளவர்கள் பற்றி எதுவும் பேசக்கூடாது என்று திருத்தம் செய்திருக்கிறதாம் என்றார் பரமசிவம்.

எப்படியோ ஜே.வி.பி., ஹெல உறுமய மற்றும் சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளும் அவர்களுடைய ஊடகங்களும் இணையத்தளங்களும் போரினால் பாதிக்கப்பட்டு தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லமுடியாமலும், விவசாயம், மீன்பிடி ஆகிய சொந்தத் தொழில்களைச் செய்யமுடியாமலும் அவதிப்பட்ட மக்கள் கடற்கோளினால் மேலும் அவலத்துக்குள்ளாகியுள்ளனர். இருபெரும் அழிவுகளினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயக மக்களுக்கு எந்த உதவியும் கிடைக்கக்கூடாதென்பதில் உறுதியாக இருக்கின்றன.

விடுதலைப் புலிகளுடன் அரசு எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சாட்டுச் சொல்லி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவி கிடைக்காமல் செய்வதில் அவைகள் திட்டமிட்டே செயற்படுகின்றன. இதேசமயம் கிழக்கில் எங்கே வசதி கிடைக்குமோ அங்கே சிங்களவர்களைப் புதிதாகக் கொண்டுவந்து குடியேற்றுவதில் அவை கவனமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன என்றேன்.

இதேசமயம் எங்கள் ஆட்கள் புலி எதிர்ப்பு என்று சொல்லி சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகளுக்கு ஆதரவாகவும் உடந்தையாகவும் செயற்படுகின்றனர். அவலப்படும் மக்களைப் பற்றி சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள் கவலைப்படாதது ஆச்சரியமல்ல. நம்ம சங்கரியார் பொதுக்கட்டமைப்பு தேவையில்லை, புலிகளுடன் சேர்ந்து திட்டம்போட்டு உதவவேண்டிய அவசியமில்லை, அவர்கள் தங்கள் இடத்தை அவர்களே பார்க்கட்டுமே என்று அம்மையாருக்கென்று கடிதம் எழுதி தூதரங்களுக்கு அனுப்பியதாகச் சொல்லி ஊடகங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். இவரைப் பெரியார் என்று இனவாத ஆங்கிலத் தினசரி தலையங்கத்தில் புகழ்ந்து எழுதியிருப்பது ஒன்றே இவர் யார் என்தை அடையாளப்படுத்தப்போதுமானது. பொதுக்கட்டமைப்பு தேவையில்லை, மக்களுக்கு எந்த உதவியும் கோகக்கூடாது என்று சொல்லியும் இவர் தமிழ் மக்களுக்குச் சுதந்திரமில்லை என்று கண்ணீர் வடிக்கிறாராம் என்றார் பரமசிவம்.

பொதுக்கட்டமைப்பு சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து செயற்படுவதற்கு ஜனாதிபதி அம்மையாருக்கு சுதந்திரக் கட்சி அதிகாரம் வழங்கியிருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கிறதே என்றேன்.

பொதுக்கட்டமைப்புக்கும், சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கலையும் மேற்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கத் தீர்மானித்திருப்பதாகவும், ஆனால் சகல கட்சிகளுடனும் ஜனாதிபதி பேசி, இது சம்பந்தமாக ஒரு முடிவு எடுக்கவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம் என்றார் பரமசிவம்.

எந்தப் பிரச்சினையானாலும் ஜனாதிபதி அடுத்து எந்தப் பதவிக்கு எப்படி வரமுடியும் என்பதை அடிப்படையாக வைத்தே சகல விடயங்களும் ஆராயப்பட்டுவருவதாகத் தோன்றுகிறது என்றேன்.

ஜனாதிபதி மட்டுமா எதிர்க் கட்சித் தலைவரும் தாம் எப்படி அடுத்த ஜனாதிபதியாக வருவது எப்போது அந்தப் பதவிவரும் என்பது பற்றித்தான் கலைப்படுகிறார் என்றார் பரமசிவம்.

பொதுக்கட்டமைப்புக்கு எப்படியும் ஜனாதிபதி சம்மதித்துத்தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனுடன் சேர்த்து சமஷ்டி யோசனையையும் வைத்து இனப்பிரச் சினைக்கும் தீர்வுகாணலாமென ஜனாதிபதி சிந்திக்கிறாரோ தெரியவில்லை என்றேன். அவர்கள் என்ன சிந்திக்கிறார்களோ தெரியவில்லை.

ஆனால் அவர்களுக்கு இப்போது ஒன்று மட்டும் புரிந்திருக்கிறது. என்னதான் சொன்னாலும், செய்தாலும் விடுதலைப் புலிகளைப் புறந்தள்ளியோ, அவர்களில்லாமலோ தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாதென்பதை அவர்கள் உணர்ந்துகொண்டுள்ளனர். அவர்களை அண்டிப் பிழைக்கும் நம்மவர்கள் தான் புலிகள் இல்லாமலேயே எங்களால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமென்று வாலாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

சமஷ்டிமூலம் தீர்வு காணலாம், எண்பது வீத மக்கள் இதை ஆதரிப்பர் என்று ஜனாதிபதி சொல்லிவிட்டார். எப்படியான சமஷ்டி முறை எப்படியான அதிகாரங்கள் அதற்கிருக்கும் என்பதைப் புற்றியெல்லாம்யோசிக்காமல் ஆராயாமல் சமஷ்டி வரப் போகுது தமிழ் மக்களே இதைத்தவற விடாமல் ஆதரிக்கத் தயாராகுங்கள் என்று மக்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்கிவிட்டார்கள் வடக்கு கிழக்கு மாகாணசபையைப் பொறுப்பேற்ற வரதறாஜப் பெருமாள் க்டைசியில் தனிநாடு பிரகடனப்படுத்துவதற்கு பிரேரணையொன்றைப் பிரேரித்து விட்டுத்தான் சென்றார் என்பதை அவர்கள் மறந்துவிடலாம் மக்கள் மறந்துவிட மாட்டார்கள்.

கையாலாகாதவர்களெல்லாம் எப்படியாவது விடுதலைப் புலிகளுக்கு எதிராக எவர் செயற்பட்டாலும் உதவிக்கும் ஒத்துழைப்புக்கும் தயாராக இருக்கின்றார்கள். புலிகளுக்கு எதிராகத் திரளுங்கள் என்று அவர்கள் மூலைக்கு மூலை நின்று அழைப்புவிடுகிறார்கள். புலிகள் தவறு செய்தார்கள் என்று வாயில் வந்ததையெல்லாம் சொல்லுகிறார்கள் ஆனால் தாங்கள் மக்களுக்கு என்ன செய்தார்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்பதைச் சொல்ல முடியவில்லை. இவர்கள் ஏதாவது நல்லது செய்திருந்தால் அல்லது செய்வதற்கு ஏதாவது திட்டமும் சக்தியும் இருந்தாலல்லவா சொல்லுவதற்கு என்று சொன்னபடியே எழுந்தார் பரமசிவம் எதையும் கேட்டுப் பெறப் பார்ப்போம் இல்லையேல் இதுவரை பெற்றது போல் மீதியையும் பெறுவது தவிர வேறு வழியிராது என்று மேலும் சொல்லிச் சென்றார் அவர் !

இறையியல்... ஜெ.ஜெயராட்

# கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடே நாம் தொடர்ந்தும் வாழ்வோம்

இறைமகன் இயேசு தனது மக்கள் செய்த பாவத்துக்குப் பரிகாரம் தேடுவதற்காக, தந்தையின் சித்தப்படி பாவங்கள் அடங்கிய கழுமரச் சிலுவையைச் சுமந்து மரித்தார்.

பின் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இந்த உயிர்ப்பின் மூலம் தனது மக்கள் செய்த பாவத்திலும் இருந்து, அவர்களை உயிர்த்தெழச் செய்தார். இந்தத் தினத்தையே கிறிஸ்தவர்கள் உயிர்த்த ஞாயிறாகக் கொண்டாடுகிறார்கள்.

தனது தந்தையின் சித்தத்துக்கு அமைய, இயேசு இவ்வுலகில் மனித அவதாரம் எடுத்து அன்னை மரியாள் மூலமாக இவ்வுலகில் பிறந்தார்.

மனிதனாக தெய்வமகன் மனித குணங்கள் கொண்டவராகவும், தெய்வத்தன்மை கொண்டவராகவும் இவ்வுலகில் வாழ்ந்தார். மனிதர்கள் அதிசயிக்கும்வகையில் தெய்வமகன் தனது தந்தையின் சித்தத்துக்கு அமைய சிறுவயதிலேயே தனது பணியை ஆரம்பித்தார்.

இறைமகன் இயேசு புதுமைகள் செய்தபோதும், தீராத நோய்களைக் குணமாக்கியபோதும், இறந்தோரை உயிர்ப்பித்தபோதும் இவர் யார் என மக்கள் அறிந்தனர். தமக்கு நல்லதொரு அரசராக இவர் அமைவார் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் தந்தையின் சித்தம் எவ்வாறு இருந்ததோ, அவ்வாறே நடைபெற வேண்டியதாயிற்று. மக்கள் எதிர்பார்த்ததுக்கு மாறாகக் குதிரையில் படைவீரர்களுடன் வரவேண்டிய அரசர், கழுதையில் இறை. மக்களுடன் வந்தார். பாவ அக்கிரமம், கொலை, களவு நிறைந்திருந்த மக்களிடையே தெய்வமகன் மனிதனாக அன்பு, இரக்கம், பணிவு, பொறுமை கொண்டவராக வாழ்ந்தார்.

தனது வாழ்க்கைமூலம் இவ்வுலக மக்களையும், தன்னைப் போன்று வாழ அழைத்தார். செல்வந்தர்களை உயிர்த்த இயேசு தேடிவரவில்லை. மாறாக இந்த மண்ணுலகில் ஏழை எளியவர்களையே தேடிவந்தார்.

தனது பணியை மேற்கொள்வதற்கு அவர் பன்னிரண்டு சீடர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சியளித்தார்.

காலம் நெருங்கியது. தந்தையிடம் அவர் செல்லவேண்டிய காலம் நெருங்கியது. தனது சித்தத்தைத் தானே அறிந்த இறைமகன் இயேசுவை சாத்தான் சோதனைசெய்ய முயற்சித்தது. இருந்தும் இறைமகன் இயேசுவைச் சாத்தானால் வெற்றிகொள்ள முடியவில்லை. காலம் நெருங்கியது.

இறைமகன் மாட்சிமைப்படுத்தப்படவிருக்கிறார். இந்த நிலையில் இயேசுவின் சீடர் ஒருவர்- இயேசு முன் அறிவித்ததுபோன்று முத்தமிட்டுக் காட்டிக்கொடுக்கப்படுகின்றார்.

கைது செய்யப்பட்ட இயேசு தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்தப்படுகிறார். தொடர்ந்து இயேசுவை பிலாத்துவிடம் கொண்டு செல்கின்றனர்.

பிலாத்து விசாரணை செய்த பின், சிலுவையில் அறையுமாறு கூறினார்.

(மத் 27:26 இயேசுவைக் கசையால் அடித்துச் சிலுவையில் அறையுமாறு ஒப்புவித்தான்.)

ஒப்புவிக்கப்பட்ட பாவச் சிலுவையைச் சுமந்தபடி கல்வாரி மலையை நோக்கிப் புறப்படுகிறார். மக்கள் பாவத்தின் பாரம் தாங்க முடியாத இறைமகன் இயேசு மூன்று முறை கீழே விழுகிறார். இறுதியில் அவரைச் சிலுவையில் அறைகின்றனர்.

அவரது மரண தண்டனைக்கான காரணத்தையும் எழுதுகின்றனர். (மத் 27:37 - 38).

"இவர் யூதரின் அரசனாகிய இயேசு என்று தன்னைக் கூறியதே என" மனித உருவெடுத்த இயேசு மனித சாயலில் இருந்து பிற்பகல் மூன்று மணியளவில் இறக்கிறார்.

தொடர்ந்து மூன்றாம் நாளாகிய இன்று, இயேசு - மக்கள் அனைவரும் செய்த பாவத்திலிருந்து மீட்படைய உயிர்த்தெழுகிறார்.

திருமுழுக்கு என்னும் திருவருட் சாதனத்தினால் இயேசுவோடு நாம் அனைவரும் இணைந்திருந்தோம்.

இறந்த இயேசுவை மாட்சிமை மிகுந்த தந்தை உயிர்த்தெழச் செய்ததுபோல, நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாக திருமுழுக்கின் வழியாக அடக்கம் செய்யப்பட்டோம்.

நாம் இனிமேலும் பாவத்துக்கு அடிமைகளாக இராதபடி, எமது பழைய பாவங்கள் அனைத்தும் சிலுவையில் அறையப்பட்டன.

அனைத்து மக்களின் பாவங்களில் இருந்து மீட்புப் பெறுவதற்கு இறைமகன் இயேசு ஒருவரே பாடுபட்டு, மரணமடைந்து உயிர்த்தெழுந்தார்.

ஆனால் நாம் இனறு எத்தனைபேர் செய்த பாவங்களை மன்னித்துக் கொள்கிறோம். இல்லையேல் பழிதீர்க்கிறோமா? அன்று அவமானத்தின் இறுதித் தண்டனையின் சின்னமாக விளங்கிய சிலுவை - இன்று அனைத்து மக்களின் உள்ளத்திலும், இல்லத்தில் இறைமகன் இயேசுவின் அடையாளச் சின்னமாகப் போற்றப்படுகிறது.

இவ்வுலகில் எத்தனைபேர் பலவிதமான பாரச்சிலுவைகளைச் சுமந்து செல்கிறார்கள். இவர்களுக்கு உதவிசெய்ய நினைத்தோமா? இல்லை. இப்போதும் வேடிக்கை பார்க்கவே விரும்புகிறோம். மனுக்குலத்திலுள்ள ஏழை எளியவர்களைத் தேடியே இயேசு மண்ணுலகில் வந்தார். ஆனால் நாம் இன்று எத்தனை ஏழை எளியவர்களை மதியாது செயற்படுகிறோம்.

கிறிஸ்து விட்டுச்சென்ற சமாதானத்தை முழுமையாகப் பகிர்ந்துகொள்ள முன்வருகின்றோமா? இப்போது, இயேசுவைத் தொட்டு விசுவசிக்கும் விசுவாசி போன்றே செயற்படுகிறோம்.

இறைமகன் இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது முதல்வசனமாக தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களைப் பார்த்து பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னியும் எனக் கேட்கிறார்.

இவ்வாறு நாம் எம்மிடையே மன்னிக்கும் பண்பை வளர்த்துக் கொள்கிறோமா? இல்லை. இப்போதும் இயேசுவின் ஆடையைப் பங்கிடுபவர்களாகவே காட்சியளிக்கிறோம்.



இன்று மனிதம் செத்துக் கொண்டு செல்கிறது. மானிடப் பிறவி மிதிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இருந்து நாம் மீள வேண்டும், புத்துயிர் பெற வேண்டும், புதுப்படைப்பாக மாற்றம் பெறவேண்டும்.

நாம் ஒவ்வொருவருக்கும் துன்பம் ஏற்படுகின்றபோது, இயேசுவை மறுதலித்த சீடர்களைப் போலல்லாது துன்பத்திலும் பணியாற்ற முன்வர வேண்டும்.

உயிர்த்த இயேசு தான் விட்டுச்சென்ற பணியை எம்மைத் தொடருமாறு அழைக்கின்றார். நான் எவ்வாறு உங்கள் பாதங்களைக் கழுவுகிறேன் என்றால், நீங்கள் ஒவ்வொருவரும் சென்று உங்கள் சீடர்களின் பாதங்களைக் கழுவவேண்டும் எனத் தனது சீடர்களிடம் கேட்கிறார்.

தூய ஆவியால் வலுப்பெற்ற சீடர்களும் இயேசுவின் பணியைத் தொடர்ந்தார்கள். இந்தப் பணியை நாம் இன்று மேற்கொள்ள ஏன் தயங்குகிறோம்.

மீண்டும் இறைமகன் இயேசு பாரச்சிலுவையைப் சுமப்பதற்கு வழிசமைத்துக் கொடுக்கிறோம் அல்லவா.

அறிந்தும் பாவம் செய்கின்றோம். இவ்வுலக நாட்டங்களிலேயே எமது கவனத்தைச் செலுத்துகின்றோம்.

இறைவன் மீது மக்கள் கொள்ளும் நம்பிக்கை இன்னும் வலுப்பெற வேண்டும்.

திருமுழுக்கின் வழியாக இயேசுவின் மக்களாக ஒன்றிணைந்திருக்கும் நாம் அனைவரும் - இறை இயேசுவின் பாதையில் சென்று, அவரது நற்சீடர்களாக வாழ்வோம்.

## ஒளி இழந்த திருவதனம்



பன்னிரு சீடருள்ளே பகைவனாய் எழுந்த யூதாஸ்
முப்பது காசுக்காக யூதர்கள் தலைவனிடம்
முன்சென்று முத்தமிட்டு காட்டியே கையளிக்க
கத்தி, வாள், பொல்லு, சுட்டி, கடின போர்க்கருவியோடு
கொடுவினை புரியவென்றே கூடியே வந்து நின்ற
யூதர்கள் தலைவரோடு - சேவகர் தன்னைப் பார்த்து
யாரை நீர் தேடிவந்தீர்.
தேடிய தென்னையென்றால்,
இவர்களை இடர்பண்ணாமல் இவ்விடம் விட்டகல
அனுமதியளிப்பீரென்ற இறைமகன் இயேசு தன்னை
அணுகியே, அவர் கரத்தை கடின தோற்கயிற்றால் கட்டி
கள்வரை இழுப்பது போல் தெருவோரம் இழுத்துச் சென்றனர்
மண்ணில் வாழ் மாந்தர் வாழ மனிதனாய் வந்த தேவன்
மகிமையை அறியா மூடர் முள்ளினால் முடியைப் பின்னி
சிரசினில் அழுத்த இரத்தம் பீறியே முகம் நனைக்க
பொன் னொளிச் சுடர்வதனம் தண்ணொளி இழந்ததம்மா.

**யோ.பிரான்சிஸ்.**

## தவக்காலச் சிந்தனை



"அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார்" (மத்.28:06)

இன்று நம் ஆண்டவராம் இயேசு உயிர்த்தெழுந்த திருநாள். இயேசுவின் உயிர்ப்பிலே தான், நம் விசுவாசம் வலுப்பெறுகிறது.

இயேசுமட்டும் உயிர்த்திராவிட்டால் நமது விசுவாசம் எல்லாம் வீண். புத்தர், காந்தி ஒருகாலத்தில் வாழ்ந்து மரித்துப் போனவர்களின் பட்டியலிலே இயேசுவும் ஒரு சரித்திர நாயகனாயிருப்பார்.

ஆனால், உலக வரலாற்றிலே திறந்து கிடக்கும் ஒரேஒரு கல்லறை, இயேசுவின் கல்லறைதான். ஏனையோர்களின் கல்லறைகள் எல்லாம் இன்றும் மூடியவாறே உள்ளன. காரணம் – அவர்கள் சிறிது காலம் வாழ்ந்தார்கள். பின்னர் மரித்தனர் என்பது தான்.

ஆனால் உயிர்த்தெழுந்து, தன்கல்லறையைப் பிறர் கண்டு விசுவசித்து புதிய நம்பிக்கையைப் பெறுமாறு திறந்து வைத்தவர் இயேசு. இறைவனால் எதுவும் நடக்கும் என நம்புவது தான் விசுவாசம். நம்மில் அநேகருக்கு மரணத்தைக் குறித்துப் பயம். ஆனால் நீறைஞானிகளும், புனிதர்களும், அப்போஸ்தலர்களும் சாவை விரும்பி ஏற்றனர். புனித பிரான்சீஸ்கு அசிசியார் மரிக்கும் பொழுது நித்திய வாழ்வுக்குப் பிறக்கின்றோம் என்றார். மரணம் இவர்களுக்கு பயத்துக்குப் பதிலாக புதியதொரு நம்பிக்கையைக் கொடுத்தது. எனவே நம்மை மறுவாழ்வுக்கு அழைத்துச் செல்லும் இன்றைய உயிர்ப்பின் திருவிழா, விண்ணக வாழ்வுக்குரிய நெறிமுறைகளைக் கைக்கொள்ளும்படி அழைக்கிறது. உயிரும், உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் வாழ்வர் என்ற இயேசுவின் வாக்கை கொண்டு வாழ்வோம்.

= மோ.தார்சீசியஸ் =

# தமிழக அரசியல் ஈழத் தமிழர் பக்கமாகத் திரும்பப் போகின்றதா?

இந்தியத் தமிழக அரசியல் இருக்கிறதே, அது முற்றிலும் வேறுவிதமான ஒரு விளையாட்டு.

அதன் விதிகள் வேறு, மைதானம் வேறு, ஆட்டக்காரர்களும் ஒரு தினுசானவர்கள்.

அப்படியிருந்தும் அதில் ஒரு வசீகரம் இருக்கிறது.

கொஞ்சம் ஊன்றிப் பார்த்தால் தமிழக அரசியலில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் தமிழக மக்கள் என்பதையும் தாண்டி, ஈழத்தமிழர்களின் வாழ்க்கையும் மறைமுகமாக தமிழக அரசியலில் ஏதோ ஒரு வழியில் சம்பந்தப்பட்டிருக்கிறது.



ஈழத் தமிழர் நலன் பற்றி எம்.ஜி.ஆர் ஆர்வம் காட்டிய அளவில் நூறில் ஒரு பங்கு ஆர்வம்கூட ஜெயலலிதாவுக்கு இல்லை.

1983 இல் இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்ட காலத்தில் ஈழத்தமிழருக்கு, தமிழக அரசியல் சார்பாக இருந்திராவிட்டால் - இலங்கைப் பிரச்சினை வேறுவிதமாகத் திசை திரும்பிப் போயிருக்கும் என்பதை மறுக்க முடியாது. அப்போது தமிழக அரசியலில் அமோகமாக வீசியது எதுவென்றால் அது ஈழத்தமிழர் அலைதான் - கட்சி வேறுபாடுகளையெல்லாம் கடந்து !

பின்னர் நிலைமை தலைகீழாக மாறிப் போனது - முற்றிலும் வேறுவிதமான ஆட்டக்காரர்கள் மைதானத்தில் விளையாட வந்தார்கள். அவர்களில் பலருக்கு ஈழத் தமிழர் விவகாரத்தில் அக்கறை இருந்ததில்லை - ஆதாயமும் இருக்கவில்லை. எனவே ஈழத்தமிழர் விவகாரம் தமிழக அரசியலிலிருந்தே காணாமற்போய்விட்டது.

வெங்காய விலையிலிருந்து வெங்கையா நாயுடு விவகாரம் வரை அரசியலில் முக்கியமாகிப் போனது!

ஆனால் -

இதே நிலைதான் இனியும் தொடருமா என்றால், அதற்கு இல்லை என்று பதில் சொல்வதற்கான சூழ்நிலை கொஞ்சம் கொஞ்சமாக உருவாகி வருகிறது தமிழக அரசியலில்.

Over Night இல் காட்சி மாறுவதற்கு இது ஒன்றும் மந்திரத்தால் மாங்காய் பறிக்கும் சமாச்சாரமல்ல. சிறிது சிறிதாகத்தான் மாற்றம் நிகழும். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் காட்சி மாறும்.

மாறியே தீரும் என்பதை வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், எப்போது என்று கேட்கக்கூடாது. அது அந்தத் தமிழக அரசியல் தலைவர்களுக்கே தெரியாது.

சரி எப்படிச்சொல்கிறோம் தமிழக அரசியல் ஈழத்தமிழர் பக்கமாகத் திரும்பலாம் என்பதை.

முதலில் ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ளுங்கள். தமிழக அரசியலில் மக்களின் மனோபாவத்திற்கு ஏற்றவிதத்தில் என்பதை வைத்து அரசியல் செய்வது என்பதை அரசியல் கட்சிகள் தீர்மானிப்பதில்லை.

நாங்கள் எதைவைத்து அரசியல் செய்யப் போகின்றோம் என்பதை முதலில் தமிழகக் கட்சித் தலைவர்கள் தீர்மானிக்கிறார்கள். மக்களை அந்தத் திசையில் இழுத்துச் செல்கிறார்கள்.

இதுவரை தமிழக அரசியலில் ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொரு விடயத்தை வைத்து அரசியல் செய்திருக்கிறார்கள் தமிழக அரசியல்வாதிகள். இந்த ஒவ்வொரு விடயமும் அவர்களாகவே உருவாக்கிய விடயங்களே தவிர மக்கள் எழுச்சியால் கிளம்பியவையல்ல.

மக்கள் ஒரு பிரச்சினையை அரசியல்வாதிகளிடம் கொண்டுபோய் ஐயா இதை வைத்து அரசியல் செய்யுங்க என்று சொல்வதில்லை. அரசியல்வாதிகள் - மகாஜனங்களே... இதோ பிரச்சினை, இதை வைத்துத்தான் அடுத்த ஆறு மாதத்திற்கு அரசியல் செய்யப்போகிறோம் என்று மக்களை இழுத்துச் செல்கிறார்கள். சாதுவான மக்கள் - கைதட்டி விசிலடித்துவிட்டுப் பின் தொடர்கிறார்கள்.

ஒரு கட்டத்தில் அரசியலைத் திருப்பியது வெங்காய விலை என்றால் (நம்புங்கள் அப்படியும் ஒருமுறை நடந்தது கடந்த காலத்தில்) அதை எதிர்க்கட்சி ஊதிவிட்டிருக்கும் வேறொரு கட்டத்தில் அரசியலைத் திருப்பியது - ஜெயலலிதா செய்த ஊழல் என்றால், அதை தி.மு.க மக்கள் மத்தியில் கொண்டு சென்றிருக்கும். இப்படியே ஹிந்தி எதிர்ப்பு, விவசாயிகளின் பிரச்சினை (நாராயணசாமி நாயுடு ஞாபகமிருக்கிறதா) என்று ஒவ்வொரு சீசனுக்கும் ஒவ்வொரு விடயம் தமிழக அரசியலைத் திருப்பியது. அதை வைத்துத்தான் கதை நடந்தது. வோட்டு விழுந்தது.

அந்தத் திரும்பலைத் திறமையாகச் செய்த கட்சி ஆட்சிக்கு வந்தது.

சில மாதங்களுக்கு அந்தப் பிரச்சினை பற்றி தமிழக மக்கள் தலைபோகும் விதத்தில் பேசிக் கொண்டிருப்பார்கள். விடயத்தை மக்களிடம் கொண்டு சென்ற கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதும் விடயம் அமுக்கப்பட்டுவிடும். மக்களும் மறந்து போய் விஜயகாந்படம் பார்ப்பதில் Busy ஆகிவிடுவார்கள்.இது தான் நடைமுறை.


1983 இல் இலங்கையின் இனக்கலவரத்துடன் சேர்ந்து தமிழக அரசியலில் ஈழத்தமிழர் பிரச்சினை பெரிதாக அடிபட்டதன் காரணமும் அரசியல் கட்சிகளின் உபயம்தான். (அதனால் நிறைய நன்மைகள் ஏற்பட்டன என்பது வேறு விடயம்)

இனக்கலவரம் பற்றிய செய்திகள் தமிழகத்திற்கு வரத்தொடங்கிய போது, தமிழக மக்கள் ஓரளவு கவலைப்பட்டார்கள். உதவி செய்ய விரும்பினார்கள் என்ற அளவில் இருந்த சூழ்நிலை, எப்போது தமிழக மக்கள் உணர்ச்சி வசப்பட்டு பொங்கி எழுந்தார்கள் என்பதாக மாறியது சொல்லுங்கள் பார்க்கலாம்.

தமிழக அரசியற் கட்சிகள் ஈழத்தமிழர் பிரச்சினையை வைத்து அரசியல் செய்யத் தொடங்கியபோதுதான்!

யோசித்துப் பாருங்கள். அந்தக் காலகட்டத்தில் ஆட்சியிலிருந்த எம்.ஜி.ஆருக்கு எதிர் கட்சித் தலைவராக இருந்தவர் கலைஞர். கலைஞருக்கு எப்போதுமே தமிழ், தமிழர், தமிழுணர்வு என்ற ரீதியிலான செல்வாக்கு இல்லை. ஆனால் மக்களின் ஆதரவு இருந்தது. (தி.மு.கவினர் எம்.ஜி.ஆரை தமிழரல்ல என்று வேறு சொல்லிக் கொண்டிருந்தார்கள்) அப்படியான அரசியல் சூழ்நிலையில் தமிழகம் இருந்தபோது இலங்கையில் இனப்பிரச்சினை - தமிழர்கள் தாக்கப்பட்டார்கள் - உயிரிழந்தார்கள்.

தமிழர், தமிழுணர்வு என்ற செல்வாக்கை வைத்திருந்த கலைஞரின் home ground அது. விடுவாரா கலைஞர்? அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கினார். இது ஆட்சியிலிருந்த எம்.ஜி.ஆருக்கும் ஒரு உத்வேகத்தைக் கொடுத்தது. தமிழர், தமிழுணர்வு எல்லாத்திற்கும் ஏகபோக உரிமை யாளர் கலைஞர் மாத்திரம்தானா என்று எம்.ஜி.ஆரும் களத்தில் இறங்கினார்.



நிச்சயமாக தி.மு.கவின் அடுத்த தலைவர் நீங்களல்ல என்று அன்பழகனுக்குச் சொல்கிறாரா கருணாநிதி?


ஈழத்தமிழருக்கு அவர் ஒன்று செய்தால இவர் பத்துச் செய்வார். அவரது கட்சியினரும் உதவினார்கள். இவரது கட்சியினரும் ஓடிவந்தார்கள்.

எம்.ஜி.ஆரும், கலைஞரும் ஈழத்தமிழர்கள் பற்றிப் பேச அ.தி.மு.க , தி.மு.க இரண்டாம் கட்டத் தலைவர்களும் ஈழத்தமிழர் பற்றிப் பேச இருகட்சிகளின் தொண்டர்களும் ஈழத்தமிழர்கள் பற்றிப் பேச -

தமிழகமே ஈழத்தமிழர் பற்றிப் பேசத் தொடங்கியது! ஈழத்தமிழர் விவகாரம் தமிழக அரசியலுக்குள் வெற்றிகரமாக நுழைந்தது.

நான் சொல்லுவதைக் கேட்கும்போது உங்களில் சிலருக்கு இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட வாதம் என்பது போலத் தெரியலாம். ஆனால், கொஞ்சம் யோசித்துப் பார்த்தீர்கள் என்றால் இதிலுள்ள Logic புரியும்.

ஈழத்தமிழ் மக்களுக்கு தமிழக மக்களால் நிறைய நன்மைகள் வலிய வந்துசேர்ந்தன.



ஈழத்தமிழர் விவகாரத்திலும் தனித்துவமான முத்திரை பதித்தவர்...

அதற்கு முக்கிய காரணம் எம்.ஜி.ஆர் என்ற தனிப்பட்ட மனிதர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஆரம்பத்தில் அரசியலாக அணுகியவர், அவரது தனிப்பட்ட உதவி செய்யும் குணத்தின் காரணமாக முழுமனத்துடன் ஈடுபாடு காட்டினார்.

பல சந்தர்ப்பங்களில் வாரி வழங்கினார். வலது கை செய்வது இடது கைஅறியாத விதத்தில் நிறையவே உதவிகள் செய்தார்.

ஆனால் ஈழத்தமிழர்களின் துரதிஷ்டம், எம்.ஜி.ஆர் - ஈழத்தமிழர் பிரச்சினை முடிவதற்கு முன்னரே அமரராகிவிட்டார்.

1980 களில் எம்.ஜி.ஆரின் உதவிகள் ஈழத்தமிழர்களுக்குக் கிடைத்தன. அதுவே ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் கிடைத்திருந்தால் ஒரு வேளை சரித்திரம் மாறினாலும் மாறியிருக்கலாம்.

எம்.ஜி.ஆருக்குப் பின்னர் ஈழத் தமிழர் விடயத்தில் தமிழக அரசியலில் யாருமே ஆர்வம் காட்டாத நிலையில், தமிழக அரசியல் ஈழத்தமிழர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகிவிலகிப்போய் - ஒரு காலகட்டத்தில் ஈழத்தமிழர்கள் என்றால் ஏதோ தீண்டத்தகாத வஸ்து என்ற நிலை ஏற்பட்டது.

அந்தக் காலகட்டத்தில் தமிழக அரசியலின் போக்கு மாறியது. கலைஞரின் அரசியல் எதிரி- ஈழத்தமிழர்களுக்கும் ஆதரவு கொடுத்த எம்.ஜி.ஆர் என்பது மாறி ஜெயலலிதா என்றானது.

வேறு விதமான மைதானம்,வேறு விதமான அணி, வேறு விதமான விளையாட்டு.


இந்த விளையாட்டில் ஈழத்தமிழருக்கு ஆதரவாக இருப்பது ஒரு Minus point என்பதான நிலைமை ஏற்படுத்தப்பட்டது.

தி.மு.கவும் சரி, அ.தி.மு.க வும் சரி அந்தக் கோணத்திலேயே காய்களை நகர்த்தினார்கள். அவர்களது கட்சித் தொண்டர்களும் அதையே பின்பற்றி வந்தார்கள். மக்களும் Automatic ஆக ஈழத்தமிழர் பிரச்சினையிலிருந்து விலகிச் சென்று விட்டார்கள். Chapter Closed!

ஈழத்தமிழருக்கு இருந்த தமிழகம் என்ற இரண்டாவது தளம் தனது கதவுகளை இறுக மூடிக்கொண்டது. இனி அடுத்த கட்டத்திற்கான காலம். (அரசியல் நாளை தொடரும்)



# பாகிஸ்தானுக்கு எப் - 16 விமானங்கள்; அமெரிக்காவுக்கு இந்தியா கண்டனம்!



பாகிஸ்தானுக்கு அமெரிக்கா விற்கச் சம்மதித்துள்ள எப் - 16 ரக போர் விமானம் இதுதான். (பைல் படம்)

பாகிஸ்தானுக்கு, அணுவாயுதங்களைக் காவிச் செல்லும் எப் - 16 போர் விமானங்களை விற்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ், இந்திய பிரதமர் மன்மோகன்சிங்குடனான தொலைபேசி உரையாடலின் போது தெரிவித்ததையடுத்து, பிரதமர் மன் மோகன்சிங் இந்தியாவின் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் நேற்று முன்தினம் மாலை 4.45 மணியளவில் பிரதமர் மன்மோகன்சிங்குடன் 15 நிமிட நேரம் தொலைபேசியில் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினார். இதன்போது எப் - 16 நவீன ரக போர் விமானங்களை- அமெரிக்கா, பாகி ஸ்தானுக்கு விற்பனை செய்யவுள்ளதனை புஷ், மன் மோகன் சிங்கிற்கு தெரியப்படுத்தினார்.

புஷ்ஷின் இந்தத் தகவலை அறிந்த மன்மோகன் சிங், இந்தியாவின் கண்டனத்தைத் தெரிவித்ததுடன், அமெரிக்காவின் இந்த முடிவு இந்தியாவுக்கு ஏமாற் றத்தை அளிப்பதுடன், எப் 16 விமா னங்களை பாகிஸ்தானுக்கு விற்பதன் மூலம் தெற்காசிய பிராந்தியத்தின் பாதுகாப்பு சூழ்நிலைக்கு பாதிப்பு ஏற்படுவதுடன், எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்துமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை பாகிஸ்தானுக்கு எப் - 16 போர் விமானங்களை விற்க அமெரிக்கா முடிவு செய்திருப்பதைப் பாகிஸ்தான் அமைச்சர் ஷேக் ரசீத் அகமட் வரவேற்றுள்ளதுடன், இதன் மூலம் இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் மேலும் வலுப்படுமெனவும் தெரிவித்தார்.

இதனிடையே எப் - 16 போர் விமானங்களை அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு விற்பனை செய்வதனை அமெரிக்க செனட் சபை உறுப்பினர் லாரி பிரஸ்லர் எதிர்த்துள்ளார். எப் - 16 விமானங்கள் அணுகுண்டுகளைக் காவிச்செல்லக்கூடியவை. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கும், இந்த விமானங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா 1980 ஆம் ஆண்டில் 111 எப் - 16 விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்பனை செய்தது. இதன் பின்னர் 1983 - 1987 காலப் பகுதியில் மேலும் 40 எப் - 16 விமானங்களை வழங்கியது. இதன் பின்னர் 3 ஆண்டுகள் கழித்து பாகிஸ்தான் அணுகுண்டு பரிசோதனை செய்ததையடுத்து எப் - 16 விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்க அமெரிக்கா தடை விதித்தது. தற்போது அந்தத் தடையை விலக்கி மீண்டும் எப் - 16 விமானங்களை விற்பதற்கு அமெரிக்கா முடிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# மேற்குக்கரை யூதக் குடியிருப்புக்கள்; இஸ்ரேல் தொடர்ந்து வைத்திருக்கும்!

## அமெரிக்கா எதிர்பார்க்கிறதாம்





மேற்குக் கரையின் யூதக் குடியிருப்புப் பகுதியை இஸ்ரேல் தொடர்ந்தும் தன்வசம் வைத்திருக்குமென வொஷிங்ரன் எதிர்பார்ப்பதாக, இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதுவர் டன் கோட்சர் தெரிவித்துள்ளார்.

இறுதித் தீர்வெதுவும் காணப்படாமல் இந்தப் பகுதிகளிலிருந்து யூதக் குடியிருப்புக்களை அகற்றுவதென்பது, யதார்த்தத்திற்குப் புறம்பான நடவடிக்கையெனவும் அவர் தெரிவித்தார். இஸ்ரேல் வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தக் குடியிருப்புக்களை அகற்றுவது தொடர்பாகவோ அல்லது தொடர்ந்து வைத்திருப்பது தொடர்பாகவோ அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கு மிடையில் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லையெனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதி புஷ்ஷின் கருத்தையே தான் வலியுறுத்திக் கூறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் கோட்சரின் இந்தக் கருத்தை பலஸ்தீன அதிகாரிகள் விமர்சித்துள்ளனர். பலஸ்தீனர்களின் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா செயற்படமுடியாதென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இஸ்ரேலின் குடியிருப்பு அமைக்கும் நடவடிக்கையை அமெரிக்கா தடுத்து நிறுத்தவேண்டும் எனத் தாம் வலியுறுத்துவதாக பலஸ்தீன பேச்சுவார்த்தையாளரான சயீப் எர்கத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




ஓயாத அலைகள் - 3 நடவடிக்கையின் போது ஆனையிறவு மீட்புக்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை நினைவு கூரும் வகையில்இத்தாவில் பகுதியில் அமைக்கப்பட்ட அரும்பொருட் காட்சியகத்தை கட்டளைத் தளபதி கேணல் தீபன் திறந்துவைப்பதையும் அரும்பொருட் காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் சிதைக்கப்பட்ட இராணுவ டாங்கியையும் படங்களில் காணலாம்.

# பதினேழு சந்தேகநபர்கள் உயிரிழப்பு: மனித உரிமை ஆணைக்குழு விசாரணை!

(கொழும்பு)

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் உயிரிழந்த சந்தேகநபர்கள் 17 பேர் தொடர்பாக விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

இந்த 17 பேரும் உயிரிழந்தமை தொடர்பாக பொலிஸ் மா அதிபர் - மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார். சட்ட ரீதியான செயற்பாடுகளில் தனிப்பட்ட ஒருவர் கொல்லப்படுவது செயல் ஒழுங் கல்ல. அதுபோன்ற முறைப்பாடுகளை விசாரணை மேற்கொள்ளும் போது, மனித உரிமை ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு பொலிஸ் மா அதிபர் உடன்பட்டுள்ளார்.

சட்டரீதியற்ற வகையில் நடத்தப்படுகின்ற கொலைகள் தொடர்பான விசாரணை அறிக்கையைப் பெற்று, அது தொடர்பாகச் செயற்படுவதற்கு - முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமிப்பதற்கு மனிதஉரிமை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதேபோன்று குற்றங்களைத் தடுத்தல், முறைப்பாடுகளை பதிவுசெய்தல் மற்றும் தண்டனை வழங்கல் குறித்த நீதிமன்ற செயற்பாடுகள் குறித்து விசாரணை செய்து பரிந்துரைகள் செய்வதற்காக சட்டக் கல்லூரியின் முன்னாள் அதிபரான ராஜா குணசேகரவின் தலைமையில் குழுவொன்றை அமைக்கவும் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. (தே)

# கட்டடப் பொருட்களுக்கு தீர்வை வரி விலக்கு!

## ஜனாதிபதி சந்திரிகா அனுமதி

(கொழும்பு)

சுனாமியால் அழிவுக்குள்ளான வீடுகளை புனரமைப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் அனைத்து கட்டடப் பொருட்களுக்கும் தீர்வை வரிவிலக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா அனுமதியளித்துள்ளார்.

இதன்மூலம் வீடுகளை அமைப்பதற்கான செலவுகள் குறிப்பிடத்தக்களவில் குறைவதுடன் அரசாங்கத்தால் அமைக்கப்படும் வீடுகளின் அளவும் அதிகரிக்கும். அத்துடன் தனியார் துறையினரால் அமைக்கப்படும் வீடுகளுக்கு செலவிடப்படவேண்டிய தொகையும் குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நாடு முழுவதும் வீடுகளை அமைப்பதற்கு 2000 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், தற்காலிகமாக அமைக்கப்படும் வீடுகளை நிரந்தரமாக அமைக்கப்படவுள்ள வீடுகளுக்கு முன்பாக அமைக்கும்படி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (தே)

## உதவிக் கொடுப்பனவு பெறும்

# குடும்பங்களின் தொகையை குறைப்பதற்கு அரசு முடிவு!

(கொழும்பு)

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு அரசாங்க வங்கிகள் மூலம் மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவு உதவியை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட அத்தியாவசியமாக உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு மட்டும் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக அரசாங்க உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இந்த உதவித் தொகை எவ்வித பேதமுமின்றி பாதிப்புக்குள்ளான அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்படுகின்றது. இவ்வாறு கொடுப்பனவுகள் வழங்கப்படுபவர்களிடையே அரசாங்க ஊழியர்கள், வர்த்தகர்கள் மற்றும் பிற வருமானங்கள் பெறுவோரும் உள்ளதனால் இந்த உதவித்தொகை கிடைக்க வேண்டியவர்களை தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சுனாமியால் முழுமையாக வீடுகளை இழந்தவர்களுக்கும் பாரியளவில் வீடுகள் சேதமடைந்தவர்களுக்கும் தொழில் செய்ய முடியாமல் உள்ளவர்களுக்குமே வழங்கப் படவுள்ளன.

இதன்மூலம் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெறும் இரண்டு லட்சம் குடும்பங்களின் தொகை ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஆகக் குறையுமெனத் தெரிவிக்கப்படுகிறது. 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இவ்வாறு வரையறை செய்யப்பட்டாலும் அனர்த்தங்களுக்குள்ளான மக்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 375 ரூபா கொடுப்பனவு அடுத்துவரும் 26 மாதங்களுக்கு வழங்க முடியுமா என்பது குறித்தும் அரசாங்கம் தற்போது ஆராய்ந்து வருகின்றது. (தே)

# மோதலில் 4 பொலிஸார் காயம்

(கொழும்பு)

தெனியாய பகுதியில் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் நான்கு பொலிஸார் காயமடைந்தனர்.

போதைப்பொருள் கடத்தல் முறியடிப்புச் சம்பவம் ஒன்றின் போதே இந்த மோதல் இடம்பெற்றது.

# ஒலிபெருக்கியை நிறுத்த வினோத போராட்டம்!

ஆலயமொன்றில் ஒலிபெருக்கி சத்தத்தால் அசௌகரியத்துக்குள்ளான குடும்பஸ்தர் அதை நிறுத்துமாறுகோரி - குறிப்பிட்ட ஆலயத்தின் கொடித்தம்பம் அருகே அமர்ந்து போராட்டம் நடத்திய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் வலிகாமம் பகுதியில் இடம் பெற்றது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது -

வலிகாமம் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றில் கலை நிகழ்வுக்காக சூழலில் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டிருந்தன. தமது வீட்டிற்கு அருகில் கட்டப்பட்ட ஒலிபெருக்கியின் சத்தத்தால் பயந்து அலறிய குழந்தையின் அழுகையை அடக்கமுடியாத தந்தை, நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்களிடம் ஒலிபெருக்கியை அகற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

ஆனால் அதற்கு அவர்கள் மறுத்துவிடவே குறிப்பிட்ட ஆலயத்தின் கொடித்தம்பப் பகுதியில் தனது குழந்தையுடன் சென்று அமர்ந்துகொண்டார் தந்தை.

வீட்டில் இருக்க முடியாதிருப்பதால் அங்கு வந்து தான் அமர்ந்திருப்பதாகவும். குறிப்பிட்ட ஒலிபெருக்கி அகற்றாமல் தான் அங்கிருந்து விலகப் போவதில்லை என்றும் தெரிவித்ததையடுத்தே அந்த ஒலிபெருக்கி அகற்றப்பட்டது.

இதன்பின்னர் குறிப்பிட்ட நபர் ஆலயத்திலிருந்து விலகிச் சென்றதாகவும் தெரியவருகிறது.

குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒலிபெருக்கிகள் மூலம் பாடல்கள் ஒலிக்கவிடப்படுவதால். மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருப்பதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

### மே மாதம்..

அத்துடன், தற்போதுள்ள பிரதியமைச்சர்கள் சிலரும், அமைச்சரவை அந்தஸ்துள்ள நிலைக்கு உயர்த்தப்படலாமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

### மக்கள்...

யான ஐ.தே.க. எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில் -

கருத்துக்கணிப்பில் வெற்றி பெறுவதற்காக வடக்கு - கிழக்கு மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்குடன்தான் இந்த இரு விடயங்களும் உள்ளடக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

### தமிழீழ..

ஒளிபரப்பு சேவை விரிவுபடுத்தப் படவுள்ளது.

ஆங்கிலத்தில் என்.ரி.ரி என்ற சுருக்கப்பேரில் தமிழீழ தேசியத் தொலைக்காட்சி ஆரம்பமாகின்றது.

தமிழீழத் தேசியப் பூவான கார்த்திகைப் பூவை மையமாகக் கொண்டு தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் இலச்சினை உருவாக்கப்பட்டுள்ளது

### புலிகள்...

ஆணைக்குழுவின் தலைவராக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி விஸ்வநாதனும், உறுப்பினராக அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.எம்.பி.வேரவலவும் செயலாளராக அம்பாறை நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.எம்.கலீலும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கும் மார்ச் மாதம் 2 ஆம் திகதிக்குமிடையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் தான் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### நடேசனுக்கு..

அத்துடன், காவற்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பு வரும்போது - அவர் தரை மார்க்கமாக வன்னிக்குச் செல்வதற்கு அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் மட்டுமே பாதுகாப்பு வழங்க முடியும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள உடன்படிக்கையின்படி வன்னிக்கு உலங்குவானூர்தி வசதியை வழங்க வேண்டியது புலிகளின் இராணுவ மற்றும் அரசியல் முக்கியஸ்தர்களுக்கு மட்டுமே எனத் தெரியப்படுத்தியே இந்த வேண்டுகோள் மறுக்கப்பட்டதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. (தே)

# ஹெயிட்டியிலிருந்து படையினர் விலக்கப்பட மாட்டார்களாம்!

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

ஹெயிட்டியில் பணியாற்றும் இலங்கைப் படையினர் திருப்பி அழைக்கப்படமாட்டார்கள் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

சர்வதேச அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சென்ற படையினர் ஒப்பந்தத்திற்கமைய அங்கு தொடர்ந்தும் பணியில் ஈடுபடுவார்கள் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

அங்கு பணியாற்றச் சென்ற இராணுவத்தினர் இருவர் உயிரிழந்ததையடுத்து இலங்கைப் படையினரை திருப்பியழைக்குமாறு ஜே.வி.பி கூறியிருக்கிறது.

ஆறு மாத ஒப்பந்த அடிப்படையில் 750 இராணுவத்தினர் ஹெயிட்டியில் பணியாற்றச் சென்றுள்ளனர்.

ஆறு மாதங்களின் பின்னரே அவர்கள் நாடு திரும்புவர்.

அதன்பின் அவர்களுக்குப் பதிலாக மேலும் 750 படையினரை அனுப்ப ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருப்பதாகவும் பிரிகேடியர் ரத்நாயக்க தெரிவித்தார்.

அமைதிப்படையில் பணியாற்றும் காலத்தில் யுத்தத்தில் ஒரு வீரர் உயிரிழந்தால் 50 ஆயிரம் டொலர்கள், நட்டஈடாக வழங்கப்படுவதுடன் ஒருவர் காயமடைந்தால் இராணுவ விதிகளுக்கமைய ஐக்கிய நாடுகள் அமைப்பினால் குறிப்பிட்ட ஒரு தொகை நட்டஈடாக வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# தொலைக்காட்சி விவாதத்தில் ஜனாதிபதி சந்திரிகா!

சுனாமி பேரனர்த்தம் நிகழ்ந்து மூன்று மாதங்கள் கடந்த நிலையில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பாக விசேட தொலைக்காட்சி நேர்முக கலந்துரையாடலொன்றில் ஜனாதிபதி சந்திரிகா இன்று பங்கேற்கவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் இன்று இரவு 9.30 மணிக்கு ரூபவாஹினி மற்றும் ஐ அலை வரிசைகளில் ஒளி பரப்பப்படவுள்ள இந்த நிகழ்ச்சியில், ஜனாதிபதியுடன் சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவும் பங்கேற்கவுள்ளனர். (தே)

### முஸ்லிம்..

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் உல்லை மற்றும் பொத்துவில் பிரதேசங்களில் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டன. சுனாமி பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் இந்தப் புத்தர் சிலைகள் திடீரெனத் தோற்றம் பெற்றன.

சுனாமியால் சேதமடைந்த வீடுகளைக் கட்டியெழுப்புவதற்கு முன்னர் இந்தப் புத்தர் சிலைகள் நிறுவப் பட்டுள்ளமையானது - சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதுடன் தேசியப் பாதுகாப்பிற்கும் குந்தகமாக அமையும் எனவும் அவர் மேலும் எச்சரித்துள்ளார்.

### மந்தகதியில் புனர் நிர்மாணம்...

யிருக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

புனர்நிர்மாணப் பணிகள் துரிதமாக ஆரம்பிக்கப்படுவதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து கட்டமைப்பு ஒன்றை அமைப்பது மிகவும் முக்கியமானதாகும். புனர் நிர்மாணப் பணிகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றன. இதனை துரிதமாகச் செயற்படுத்துவதற்கு சிறந்த தொடர்பாடல்களை ஏற்படுத்த வேண்டும் என இலங்கை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் விரைவில் கட்டமைப்பு ஒன்றை உடனடியாக ஏற்படுத்தப்படுகின்றமை முக்கியமானது என நாம் எண்ணுகின்றோம். இவ்வாறு செய்யாவிட்டால் புனர்நிர்மாணப் பணிகள் மேலும் தாமதமடையும். இதனால் இடம்பெயர்ந்தோர் தொடர்ந்தும் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்தே அனைவரும் கவனம் செலுத்தி வருகின்றனர். பிற காரணங்களால் இடம்பெயர்ந்து அவதிப் படுபவர்கள் இந்த நாட்டில் உள்ளனர். அவர்களையும் நாம் மறக்கக்கூடாது. அதேபோல் சமாதான முயற்சிகளையும் ஆரம்பிப்பது மிகவும் முக்கியமானதாகும். இதற்கு ஐரோப்பிய நாடாளுமன்ற உதவியும் கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.03.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.